


WRAPPER PRINTED AT: RAMANATH PRESS, MADRAS - 14


நேஷனல் பிக்சர்ஸ்
பூங்கோதை
அஞ்சலி பிக்சர்ஸ்
தயாரிப்பு
கதை வசனம்:
T.K.கிருஷ்ணசாமி
டைரக்ஷன்:
பிரசாத்
G.H.RAO

REGD M. 4642.

சந்தா விபரம்
1 ஆண்டு ரூ 7,
½ „ 3 8 0

# திராவிடநாடு

16 பக்கம்
விலை
இரண்டணா

இலங்கை 15 சதம் மலாய்நாடு 12 காசு

மலர் 8 | 3—7—49 | இதழ் 1

## நல்லாட்சி வேண்டும்

புதுவைச் சிவம்

நாடு நலன்பெற வேண்டும்—இங்கே
நல்லன யாவும் தோன்றிட வேண்டும்,
கேடு களைந்திட வேண்டும்—பொல்லாக்
கீழ்மை யடிமை விலகிடவேண்டும்
பாடு பலன்பெற வேண்டும்—இங்கு
பாட்டாளி மேட்டாளி என்னும்பல் பேதம்
ஓடி மறைந்திட வேண்டும்—இந்த
உண்மை நிலைபெற நல்லாட்சி வேண்டும்.

ஆட்டுவித்தா லாடும் பொம்மை—போன்றார்
ஆட்சியி லேநன்மை துளிர்ப்பது முண்டோ?
வீட்டுத் தலைவனாயுள்ளோன்—தனது
வீட்டிற்க் கயலாரை எஜமானாய்க் கொண்டே
கேட்டெதையும் செய்வானாயின்—அதில்
கேடுகெட்ட நிலை அன்றிமற் றுண்டோ?
மேட்டிமை வாழ்வறி யாதார்—ஆட்சி
வீழ்ச்சியும் தாழ்ச்சியும் விளைத்திடல் உண்மை.

மானம் புரந்திட்ட நாட்டில்—அந்த
மானம் பறிபோகும் நிலைமையே கண்டோம்.
ஈனஞ் சகிப்பவர் கண்டோம்—அதுவே
இலட்சியம் என்றுமே கூறுவோர் கண்டோம்.
ஊனமிகு வாழ்வைப் போற்றி—அன்னார்
உயரிய தமிழ்ப் பண்பை வீழ்த்திடு கின்றார்.
கானகந் தன்னிலு மில்லை—எதற்கும்
காவடி தூக்கிடும் சீர்கெட்ட ஆட்சி!

## உலகில் உயர்ந்த நிலப் பகுதி

# இலடாக்

வளைந்து வளைந்து செல்லும் மலை வரிசைகள்! நிமிர்ந்து நின்றும், படுத்துக் கிடந்தும் காட்சியளிக்கும் குன்றங்கள்! மேகமண்டலத்தைத் தழுவி நிற்கும் முகடுகள்! பதுங்கிக் கிடக்கும் பள்ளங்கள்! நாணிக்கோணி இருக்கும் ஓடைகள்! சலசலத்துக் கொண்டுஇழிந்தோடும்சிற்றருவிகள்! பளிங்கினைப் பரிகசித்து நிற்கும் நீர் நிலைகள்! பச்சைப் படாம் விரித்தாலன்ன பசும்புற்றரைகள்! கண் கவர் குளிர்மை உமிழ்ந்து நிற்கும் பயிர்பச்சைகள்! ஆங்காங்கு பரவிக் கிடக்கும் கட்டாந்தரைகள்! அவைகளிடையே வளர்ந்து நிற்கும் சிறுசிறு மரங்கள்! பருவக்காலங்களில் கடும் குளிர் — வெப்பங்களை வாரியிறைத்துக் கொண்டிருக்கும் கருங்கற் பாறைகள்! பார்க்கும் இடமெங்கும் ஒரே வெட்டவெளியாய்க் காட்சியளித்து நிற்கும் பொதுத் தோற்றம்! இத்தகைய தன்மைகளோடு கூடிய நாட்டைத்தான் 'இலடாக்' என்று அழைக்கிறார்கள்.

இலடாக், சிந்துநதி சுரந்தெழும் தலைப்பகுதியில் உயர்ந்தோங்கிக் கிடக்கின்றது. உலகிலேயே மிக உயர்ந்த நிலப்பகுதிகளில் இலடாக் ஒன்றாகும். கடல் மட்டத்திலிருந்து 12,000 அடி முதல் 15,000 அடி வரையில் உயர்ந்து காணப்படும் இதன் உச்சநிலைப் பரப்புகளில் மக்கள் வாழ்க்கை நடத்துகிறார்கள். இதன் கண் தோற்றமளிக்கும் மலை முகடுகள் 17,000 அடி முதல் 25,000 அடிவரையில் உயரமுள்ளவைகளாக இருக்கின்றன. இது 30,000 சதுரமைல் அளவுக்குப் பரந்து கிடக்கிறது. கட்டாந்தரைகளும், கற்பாறைகளும் ஆங்காங்கு நிறைந்திருப்பதால், காஷ்மீரத்தில் காணக்கூடிய பசுமையை இங்கு காண முடியாது.

இலடாக்கை 'சின்ன திபேத்' என்றும் அழைப்பார்கள். இலடாக் காஷ்மீருக்குக் கிழக்கே, இமயத்துக்கும் குவென் லென் மலைத்தொடருக்கும் இடையில், பால்ஜிஸ்தானுக்கும் திபெத்துக்கும் நடுவில் அமைந்திருக்கிறது. இதன் கீழ்ப்பகுதி ரூப்ஷு என்பது; தென்பகுதி ஸான்ஸ்கார்; வடபகுதி நுப்ரா; இதன் வளமான மேல்பகுதி கார்கில், மத்திய இலடாக், காரக்கோரம் மலைகளுக்குத் தெற்கிலுள்ள பீடபூமி ஆகியவை வரையில் விரிந்து கிடக்கிறது.

இலடாக்மக்கள் பொதுவாக உழவர்கள்தான். ஆனால் அதிக வளப்பமில்லாத நிலப்பகுதியாகையால் மிகப் பலரும் பயிரிட்டு வாழ வசதியில்லை. பெரும்பாலோரின் பிழைப்பு மேச்சல் தொழிலில்தான் சார்ந்து கிடக்கிறது. நீண்ட மயிரடர்ந்த வெள்ளாடு—செம்மறியாடுகளை மேய்த்து வருவதுதான் இவர்களின் வாழ்க்கைத் தொழில். இடையர் வாழ்வை மேற்கொண்டுள்ள இவர்கள் பட்டிநாய்களைத் துணைக்கழைத்துக் கொண்டும் ஆங்காங்கு தங்கித் தங்கி இடந்தோறும் சுற்றித் திரிவார்கள். ஆண்டுக்கொரு முறை இவர்கள், சந்தைகூடும் இடத்திற்கு வந்து, தங்களுக்கு வேண்டிய பண்டங்களை வாங்கிச் செல்வார்கள். தங்கள் கால்நடைகளை மேய்ப்பதற்கு ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கும் பிரபுக்களைக்கண்டு செல்வதற்கும், இவர்கள் அந்தச் சிற்றூருக்கு வருவார்கள். பால், தேயிலை, வால்கோதுமை மாவு முதலியவைகள் தான் இவர்களின் முக்கியமான ஆகாரமாகும். இவர்கள் உடலுறுதி படைத்தவர்களாகவும், விடுதலை வேட்கை கொண்டோர்களாகவும் திகழ்ந்து வருகிறார்கள். விருந்தோம்பும் பண்பு இவர்களிடத்தில் சிறந்து காணப்படுகிறது. மலைநாட்டுப் பண்பிற் கேற்பச் சிலவேளைகளில் முரடர்கள் போலும் நடந்துகொள்கிறார்கள்.

உழவுத் தொழிலுக்கு ஷோ என்னும் எருது பயன்படுத்தப்படுகிறது. நீண்ட மயிருள்ள யாக் என்னும் காட்டு எருதும், பசுவும் கலப்பதன் மூலம் இந்த ஷோ வர்க்கம் பெருகி வருகிறது. வால்கோதுமை, பட்டாணி, காரெள், அவரை முதலியவை இலடாக்கில் விளையும் முக்கிய விளைபொருள்களாகும். 14,000 அடி உயரத்தில் 'கிரிம்' என்னும் ஒருவகை வால்கோதுமை ஏராளமாகப் பயிராகிறது. இதி[illegible] தான் அங்குள்ள மக்கள் [illegible] அருந்துகிற "செங்" என் [illegible] வகை தயாரிக்கப்படுகிற[illegible],000 அடி உயரத்திற்குக் கீழேயுள்ள வெப்பம் பொருந்திய நிலங்களில் ஆப்பிள், ஆப்ரிக்காட் பழவகைகள் பயிராகின்றன.

இலடாக்கில் விளைச்சல் எல்லாம் கால்வாய்ப் பாய்ச்சல் மூலம்தா[illegible] நடைபெறுகின்றன. உழவுத் தொழிலை ஆண்களும் பெண்களும் ஒன்றுகூடித்தான் நடத்துகிறார்கள். விதைப்புக் காலத்திலும் பிள்ளை குட்டிகள் உள்படக் குடும்பம் முழுவதுமே வயலுக்குச் சென்றுவிடும். கடினமான வேலைகளையெல்லாம் ஆண்கள் கவனிப்பார்கள். அவர்களுக்குக் களைப்புத் தெரியாதபடி பெண்கள் ஆடிப்பாடி அவர்களை மகிழ்விப்பார்கள். மாலையில் வேலை முடிந்து வீடு திரும்பியதும் பெண்கள் நெருப்பு மூட்டிச் சோறு உண்டாக்குவார்கள். ஆண்கள் ஒன்றுகூடி மதுவருந்தி மகிழ்வார்கள்.

காட்டு விலங்குகளை வேட்டையாட விரும்புவோர்க்கு இலடாக்கில் எவ்வளவோ வசதிகளிருக்கின்றன.

(14-ம் பக்கம் பார்க்க)

# அவன் குற்றவாளியா?

புலவர் கோவிந்தன்

கண்ணில் கண்ட எந்தப் பொருளையும், கையால்தொட்டு வாயால் சுவைப்பது, குழந்தையின் இயற்கை. குழந்தைக்கு எட்டும் அளவில், தொடத்தகாகத பொருளை — உண்ணத்தகாக உணவை வைப்பது பெற்றோர் தவறு. வைத்துவிட்டு "விளக்கைத் தொடாதே சுடும்" "அந்தக் காயை உண்ணாதே கசக்கும்" என்று கூறுவது அறியாமை. விளக்கைத்தொட்டுச் சூடுபெற்ற குழந்தை துன்பம் தாங்காது அழும் பொழுதும் — தின்னத்தகாத காயைத் தின்றுவிட்டுத்திகைக்கும்பொழுதும் —"சொன்னேனே கேட்டாயா? இப்பொழுது துன்பப்படு" என்று வேடிக்கை பேசுவது விபரீதபுத்தி. இது குழந்தைகளுக்கு மட்டும் அல்ல; அனைவர்க்கும் பொது விதி.

அங்கே போகாதே; அதைப் பார்க்காதே; தொடாதே அதனை; உண்ணாதே அப்பொருளை; என்று தடை விதிக்க விதிக்க அங்கே போகவேண்டும், அதைப் பார்க்கவேண்டும், அதைத் தொடவேண்டும், அதை உண்ணவேண்டும் என்ற எண்ணம் மக்கள் அனைவர்க்கும் இயல்பாக எழும். ஏன் நாம் அங்கே செல்லக்கூடாது? சென்றால் என்ன நேரிடும்? என்ன இருக்கும் அங்கே? அதை நாம் ஏன் பார்க்கக்கூடாது? பார்ப்பதன் விளைவு என்ன ஆகும்? ஏன் அதைத் தொடக்கூடாது? தொட்டால் என்ன செய்யும்? நாம் ஏன் அதை உண்ணக்கூடாது? உண்டால் இனிக்குமா? கசக்குமா? பார்க்கலாமே, என்ற ஐயமும் துணிவும் எவர்க்கும் தோன்றாமல் போகாது. இது உலக இயல்பு.

குழந்தைக்கு உடல் நலம் சரி இல்லை. மருந்து கொடுத்த மருத்துவர், குழந்தைக்கு இன்னின்ன உணவு ஆகாது என்று தடை விதிக்கின்றார். குழந்தையின் உடல்நிலை சரிப்படும் வரையில், வீட்டில் உள்ளார் அனைவருமே அவ்வுணவை விரும்பக்கூடாது. அதுதான் முறை. அவ்வாறின்றி ஆகாத உணவை ஆக்கிவைத்துக்கொண்டு, குழந்தையின் எதிரிலியே அவற்றை உண்ணவும் தொடங்கி, குழந்தை அந்த உணவை விரும்பினால், "உனக்கு உடல் சரி இல்லை; உனக்கு ஆகாது" என்று கூற முற்படுவது பைத்தியக்காரத்தனம் ஆகும்.

போகாத புது இடத்திற்குப் போக, காணாத காட்சிகளைக்காண, பெறாத பொருளைப்பெற விரும்புவது மனித இயற்கை. அதற்குத் தடைவிதிப்பதால் அந்த ஆர்வம் குறைவதோ, குன்றுவதோ இல்லை; மாறாக ஓடுகிறது. ஓடுகின்ற நீர் ஓடிக்கொண்டே இருந்தால் அதன் ஓட்டமும் ஒரு நிலை உடையதாகும். இடையே தடை விதித்தால், தடையை உடைத்துக்கொண்டு ஓடும்போது முன்னிலும் விரைந்தே ஓடும். இது உலகிலே காணப்படும் இயல்பான காட்சி.

புதுப்புதுப் பொருளைக் காணவேண்டும், அவற்றைப் பெறவேண்டும், அவற்றின் பயனை அனுபவிக்கவேண்டும் என்ற வேட்கை மக்கள் அனைவர்க்கும் பொது. ஆசை அற்றவன் மனிதனே அல்ல, மரக்கட்டை; மனிதனுடைய சேவை மகத்தானது. ஆசை இல்லையேல், இன்று உலகம் வளர்ந்து இராது. ஆசையை நிறைவேற்றிக்கொள்ள அவன் தன் அறிவைத் துணைக்கு அழைத்தான். அறிவின் மிகுதியால் ஆராய்ச்சி பிறந்தது. அதன் பயனாய், கந்தமூலாதிகளைத் தின்று கழித்த காட்டுமிராண்டிக் காலம்போய், அறுசுவை உணவை, அருமையாய்ச் சமைத்து உண்ணும் அறிவுக்காலம் உண்டாகி இருக்கிறது. அறிவின் பயனாய் ஏற்பட்ட தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளவே மனித சமுதாயம் அல்லும் பகலும் துடியாத் துடித்துக் கொண்டிருக்கிறது.

மாங்காய் பறிக்கச் செல்லுகின்றனர் மாணவர் மூவர்! மரம் எளிதில் ஏற முடியாத அளவு பருத்தும் உயர்ந்தும் உள்ளது. ஒருவர் ஒருவராக ஏறத்திட்டமிடுகின்றனர், ஒருவன் ஏற, இருவர் கீழேநின்று, கையாலும், தோளாலும்,படி அமைத்துக் கொடுத்து உதவுகின்றனர். உயர ஏறிக்கொண்டமாணவன், தான் மட்டிலும் காயைப்பறித்து உண்ணத் தொடங்கிவிடுகிறான். கீழே இருப்பவரைக் கவனிப்பதாகவே இல்லை. இவர்கள் கேட்க, பிஞ்சையும், அழுகலையும் பறித்து வீசினால் இவர்கள் பொறுப்பரா? பொறுமை கடலிலும் பெரிது என்று பேசினால் கேட்பாரா? அவனை என்ன கேட்பது, நாமே ஏறிப்பறித்துக் கொள்ளலாமே என்று முயற்சிக்கின்றனர். ஆனால் மேலிருக்கும் அவனோ இவர்கள் ஏறி வாராதவாறு தடைசெய்து கொண்டே இருக்க, அதனைக்காணும், கீழே இருப்பவர்க்குக் கோபம் வரத்தானே செய்யும்! கோபம் கட்டுப்பாட்டிற்கு அஞ்சாது. சினம் சேர்ந்தாரைக் கொல்லும். இது நியதி. கோபப்படாதே என்று கூறினால் கேட்பரா? கூறுவதுதான் சரியா? கையில் கிடைத்த கல்லையும் மண்ணையும் வாரி மேலிருப்பவன் மீது வீசாமல் இருப்பார்களா? இருக்க அவர்களால் இயலாது. சூழ்நிலை அந்த நிலைமைக்கு அவர்களைக்கொண்டு போய்நிறுத்துகிறது. அவர்கள் என்னமோ நல்லவர்கள்தான்; ஆனால் நிலைமை அவர்களை அவ்வாறு செய்யத் தூண்டுகிறது.

பொய்பேசாதே, களவாடாதே, கொள்ளை இடாதே, கொலை செய்யாதே—செய்வது குற்றம், குற்றத்திற்கு ஏற்ற தண்டனை உண்டு, என்று கூறுகிறது சமுகம். குற்றம் நிகழக்கூடிய அளவில் சமூகத்தை அமைத்துவிட்டு, அவை நிகழக்கூடாது என்று கூறுகின்றது உலகம்—விந்தையிலும் விந்தை—இந்

தக் கூற்றை அறிஞர்களும்—நாடாளும் தலைவர்களும் — வாதாடும் வழக்கு உரைப்போரும் — தீர்ப்பளிக்கும் வழக்கறிஞர்களும் ஒப்பி ஏற்றுக்கொண்டு அதற்கு உடந்தையாகவும் இருந்து வருகின்றனர்.

படகிலே ஓட்டை. ஓட்டை வழியே நீர் உள்ளேவருகின்றது. நீர் வருவதைத் தடுக்க ஓட்டையைமூட வேண்டும். அதைச் செய்யாமல் நீரை மட்டும் இறைத்துக்கொண்டேயிருந்தால் மேலும் மேலும் மோதும் நீர் ஓட்டை வழியே உள்ளே புகுந்துகொண்டுதானே இருக்கும். அதுபோலச் சமுதாயத்திலே பல குறைபாடுகளை வைத்துக்கொண்டு, கேடுகள் சூழக்கூடாது என்றால் சூழாமல் இருக்குமா?

சூழ்நிலை சேறும் மலமும் செறிந்த இடம். கொசு உண்டாகாமல் இருக்குமா? கொசுவின் துன்பத்தைப் போக்க விரும்புவோர், அக்கொசு உற்பத்தியாகும் சேற்றையும் மலத்தையும் அகற்ற அல்லவோ முயற்சிக்க வேண்டும். அவ்வாறு செய்யாமல், கொசு வலை மட்டும் கட்டிக்கொள்வதால் கோரிய பலன் கிடைத்துவிடுமா? ஒருவேளை, அது ஒரு இடைக்கால நிவாரணமாக அமையலாம். ஆனால், கொசு வலை தூக்கிவிடப்படுந்தோறும் உள்ளே நுழையும் கொசு, வெளியே போகாமலே வேதனையைக் கொடுத்துக்கொண்டுதானே இருக்கும். கொசு ஒழிய வேண்டும் என்பவர், கொசு உற்பத்தியாகும் அந்தச் சேற்றையும் மலத்தையும் அல்லவா முதலில் போக்கவேண்டும். அதுபோலச் சமுதாயத்தில் பல குற்றங்கள் மலிவதற்கான சூழ்நிலைகளை வைத்துக்கொண்டு குற்றங்கள் பெருகக்கூடாது என்றால் பெருகாமல் இருக்குமா?

திருடினாய்—குற்றம்—தண்டனை, ஆறு மாதம் சிறைவாசம். பொய் பேசினாய் — குற்றம் — தண்டனை, ஐம்பது ரூபாய் அபராதம். கொள்ளையிட்டாய் – குற்றம்—தண்டனை, நாடு கடத்தப்படல். கொலை செய்தாய் — குற்றம் —தண்டனை, தூக்கிலிடப்படல். இவை இன்று நேற்று அல்ல, உலகம் தோன்றிய நாள் முதல் இடைவிடாது நடைபெறுகின்றன. திருடிச் சிறைப்படுத்தப்பட்டோர் பலகோடி. திருடுவது நின்றபாடில்லை. பொய் பேசித் தண்டம் கொடுத்தோர் தொகை எண்ணில் அடங்காது. பொய் பேசுவது தொடர்ந்தே நடைபெறுகின்றது. திருடாதே, பொய் பேசாதே, கொள்ளையிடாதே, கொலை செய்யாதே என்று போதிக்கும் நீதி நூல்கள், போதித்த பெரியவர்கள், போதிக்க எழுந்த கதைகள் எத்தனை எத்தனை கோடியோ இருந்தும் அவை நின்றபாடில்லை. காரணம், குற்றம் புரிவோர் ஏன் அக்குற்றங்களைப் புரிந்தனர்? அவற்றைச் செய்யத் தூண்டியது எது? ஏன் அது தூண்டியது? என்பதைச் சிந்தித்துப் பார்க்க சமுதாயம் இதுவரையிலும் மறுத்து வருவதேயாகும்.

குழந்தைகளைக் கொன்று தற்கொலை செய்துகொள்ள முயன்றாள். குற்றம் இரண்டு. கொலை, தற்கொலை. தனித்தனி ஆறு ஆண்டு கடுந்தண்டனை. வழக்கை விசாரித்த நீதிபதி அளித்த தீர்ப்பு அது. அவள் தன் குற்றத்தை மறுக்கவில்லை. அவள் கணவன் அன்றாடம் ஆறு அணா கூலி வாங்கும் வேலை ஆள். அவளுக்கு நாள் ஒன்றிற்குக் கூலி நான்கணா. பத்தணா வருவாயைக் கொண்டு பற்றா உணவு உண்டு உயிர் வாழ்ந்து வந்தனர், குழந்தைகள் இருவருடன். மூன்றடுக்கு மாடியை முடித்துத் தருவதில் முனைந்திருந்த பொழுது, பரண் முறிந்து விழுந்து உயிர்விட்டோரில் அவள் கணவனும் ஒருவன். ஆறு அணா வருவாயும் அறுந்துவிட்டது. நாட்டில் பணமுடை. வேலைக்கு அமர்த்திக்கொள்வோரும் அருகிவிட்டனர். அவள் பட்டினி பலநாள் குழந்தைகளைக் காப்பாற்றப் பல வீடு சென்று இரந்து பார்த்தாள். சிலர் சிறிது பிச்சையிட்டனர். பலர் பழித்தே கூறினர். மானத்தோடு வாழ வழி இல்லை. மானம் இழந்து வாழ அவள் விரும்பவில்லை. பலநாள் எண்ணி, கடைசியில் அம்முடிவிற்கு வந்தாள். துணிந்து தொழிலாற்றினாள். ஆனால், பிடிபட்டாள். தன் மாடி வீடு கட்டும் முயற்சியில் ஒருவன் இறக்கும் அளவு உயர்ந்த கட்டிடம் கட்டும் மக்கள் வாழ வசதி அளித்த இவ்வுலகு, அவளும், அவள் குழந்தைகளும் வாழ்வதற்கு வேண்டிய உணவு அளிக்க வசதி செய்து தரவில்லை. இன்றைய சமுக அமைப்பின் தன்மை இது! தன் குழந்தைகளைக் கொன்று, தானும் தற்கொலை செய்துகொள்ளத் தூண்டியது சமுகம். ஆனால், தண்டனை பெற்றது அது அல்ல; அவள்! இது நகரம் ஒன்றில் நடைபெற்றிருக்கும் சோகக் காட்சி! சமுதாயம் அனுமதித்துக் கொண்டுதானிருக்கிறது!

தறி முதலாளியிடம் கூலிக்குத் தறி நெய்து வந்தான் தொழிலாளித் தோழன் ஒருவன். இவன் பெயருக்கு நூல் பங்கீடு அட்டை பெற்றிருந்தான் முதலாளி. அதனால் அவனுக்கு நிறைய வருவாய். பங்கீட்டு நூலைப் பெற்றுப் பணக்காரன் ஆகின்றான் முதலாளி. குறைந்த கூலி மட்டுமே பெற்று வந்தான் தொழிலாளி. தன் பங்கீட்டு அட்டையைத் தானே பெற்றுப் பிழைக்க விரும்பினான். விரும்பிய அவன், தன் பங்கீட்டு அட்டையைக் கொடுக்குமாறு பலமுறை கேட்டான். தர மறுத்துவிட்டான் முதலாளி. அந்தப் பங்கீட்டு அட்டையில் பதிந்திருந்தது அத்தொழிலாளித் தோழனுடைய அன்றாட வாழ்வு. தன் வாழ்வு பாழ் ஆவதைக் கண்ட அவனுக்கு ஆத்திரம் பொங்கிற்று. பசி அவனை வாளா இருக்க விடவில்லை. ஒருநாள் வாளெடுத்து முதலாளி வீடு சென்றான். முதலாளியின் தலையை வெட்டினான். வெட்டிய தலையைக் கையில் பற்றிக்கொண்டு, வீதி வழியே சென்று, போலீஸில் சரண் புகுந்தான். இது குடியேற்றத்தில் நடந்த நிகழ்ச்சி. தொழிலாளி கொலையாளி ஆனான். கோர்ட்டார் கூறுவர்—ஏன் உலகமே கூறும் அவன் கொலைகாரன்; கொலைக்கேற்ற தண்டனை கொடு என்று. ஆனால் அவனைக் கொலை செய்யும்படி தூண்டிய சூழ்நிலையை—சமு[illegible] நிலையை எண்ணிப் பார்ப்போர் எவ[illegible]ரேனும் உண்டோ? எண்ணிப் பார்[illegible]போர் ஓர் இருவர் இருந்தாலும், அவரை நோக்கி, "முதலாளி செய்தது தவறே; என்றாலும் இவன் யார் அவனுக்குத் தண்டனை த[illegible] அரசாங்கம் இருக்கிறது அதைச் செய்ய; அதனிடம் இவன் த[illegible] குறையைக் கூறியிருக்க வேண்டு[illegible] இவனே செய்தல் கூடாது" (He should not take the law in h[illegible] own hands) என்றுதான் ந[illegible]

(16-ம் பக்கம் பார்க்க)

# வெட்கப்படுகிறோம்—வேதனைப்படுகிறோம்
# இல்லை
# விரட்டப்படுகிறோம்

சென்ற ஆண்டு நாம் நமது தலைவர் பெரியாரின் 71-வது ஆண்டு விழாவைச் சிறப்பாகக் கொண்டாடினோம்.

இந்த ஆண்டு அவர் திருமண வைபவத்தைக் காணும்படி நம்மை அழைக்கிறார்—இல்லை—அறிவிக்கிறார்.

கடந்த ஐந்தாறு ஆண்டுகளாகப் பெரியாருடைய உடலைக் கவனித்துக் கொள்ளும் திருத்தொண்டிலே தன்னை ஒப்படைத்துப் பணியாற்றி வந்தார் திருமதி மணி அம்மையார்.

அந்தத் திருமதிக்கு வயது 26.

அவர்கள்தான் பெரியாருக்கு மனைவியாகும் தொண்டில் இப்போது ஈடுபட நேரிட்டிருக்கிறது.

சென்னையில் இவர்கள் பதிவுத் திருமண மனு, பதிவு நிலையத்தில் கடந்த ஒருவார காலமாக ஒட்டி வைக்கப்பட்டிருக்கிறது. பலர் பார்த்துத் திகைப்படைந்துள்ளனர்.

பெரியாருக்கு வயது 72.

மணியம்மைக்கு வயது 26. இவர்களின் பதிவுத் திருமணம் நடைபெற இருக்கிறது.

"என்னிடம் அன்பும், எனது நலத்தில் கவலையும் உள்ளவர்களுக்கும் சற்றுப் புரட்சியாகவும் திடுக்கிடக் கூடியதாகவும், இயக்கமே அழிந்துவிடுமோ என்று பயப்படக் கூடியதாகவும், எனக்கு ஒரு கேட்டையும், இழிவும், ஏற்படக்கூடிய பெரிய தவறாகவுங் கூடக் காணப்படுவதாகத் தெரிகிறது" என்று பெரியாரே 28—6—49 விடுதலையில் வெளியிட்ட அறிக்கையிலே இதைப்பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

கோபம், கொதிப்பு இவைமட்டுமே இதனால் ஏற்படும் என்று அவர் குறிப்பு காட்டுகிறார். ஆனால் இவை மட்டுமல்ல இந்தச் சேதியாலே ஏற்பட்ட விளைவு—கண்ணீர்! தூய்மையுள்ளம் கொண்ட ஆயிரமாயிரம் இயக்கத் தோழர்கள் கண்ணீர் சொரிந்த வண்ணம் உள்ளனர்.

இந்தக் கண்ணீரை அவர் எதிர்பார்த்திருப்பாரா? அல்லது மதிக்கப் போகிறாரா என்பது ஒருபுறமிருக்க, எதற்கும் கலங்கா உள்ளம் படைத்த இளைஞர்கள் இந்தச் சேதி கேட்டுக் கண்ணீர் வடிப்பதுபோல வேறு எப்போதும் நடைபெற்றதில்லை — உலக சம்பவங்களிலேயே இதற்கு இணையானதாக வேறு ஒன்றைக் காட்டவும் முடியாது.

தலை நிமிர்ந்து தன்மானத் தூதர்களாய், விடுதலை வீரர்களாய், ஏறு நடை நடந்து செல்லும் எண்ணற்ற இளைஞர்கள் இன்று உடைந்த உள்ளத்தைச் சுமந்து கொண்டு, வழியும் கண்ணீரைத் துடைத்துக்கொண்டு பின்னும் கால்களுடன், பிசையும் கரங்களுடன், யார் பார்த்து என்னவிதமான பரிகாசம் செய்கிறார்களோ என்ற அச்சத்துடன் நடமாடும் நிலையைக் காணும் போது கல் நெஞ்சமும் கரைந்துவிடும்.

திருமணம் சொந்த விஷயம், வயோதிகப் பருவத்திலே திருமணம் செய்வதுகூடச் சொந்த விஷயந்தான். அதிலும் தனிப்பட்ட ஒருவர், அல்லது வெறும் அரசியல் கட்சித் தலைவராயுள்ள ஒருவர் திருமணம் செய்து கொள்வது, வயோதிகத்திலே செய்து கொண்டாலும் கூடக் கேட்டுத் திடுக்கிடவோ, கேலியாகப் பேசவோ கோபமடைய மட்டுமேதான் தோன்றுமே ஒழியக், கண்ணீர் கிளம்பாது. இன்று கண்ணீர்பெருக்கெடுத்து ஓடுகிறது, பெரியாரின் திருமணச் சேதி கேட்டு.

நாம் அவரை ஒரு அரசியல் கட்சித் தலைவராக மட்டும் கொண்டிருக்கவில்லை. இயக்கத்தைச் சார்ந்த ஒவ்வொருவரும் அவரைத் தங்கள் குடும்பத் தலைவர் என, வாழ்க்கைக்கு வழிகாட்டியென ஏற்றுக்கொண்டு எந்த இயக்கத்தவரும், எந்தத் தலைவரிடமும் காட்டாத அளவு மரியாதை உணர்ச்சியை, அன்பைக் காட்டி வந்திருக்கிறோம்.

நமது கண்களுக்கு அவர் நமது மானத்தை மீட்டுத் தரும் மகானாக, நம்மைப் பன்னெடும் காலமாகக் கொடுமைப் படுத்திவரும் அடிமைத்தனத்திலிருந்து மீட்கப் போர் புரியும் மாவீரராகக் காட்சிதந்து வந்திருக்கிறார்.

அவர் கண்ணோட்டம் நமக்குக் களிப்பூட்டி வந்தது.

அவர் சொல் நமக்குச் சட்டமாக இருந்துவந்திருக்கிறது.

அவர் வகுக்கும் பாதை நமக்கு விடுதலை வழியாக தெரிந்திருக்கிறது.

அவரை நாம் பின்பற்றி வந்தது ஏறத்தாழ "பக்தர்கள் அவதார புருஷர்களை"ப் பின்பற்றி வந்தது போலவேதான்.

இதற்குக் காரணம், நாம் மற்ற எந்தத் தலைவரையும்விட இவரிடம் தனிப்பட்ட தன்மை, பண்பு, இருக்கிறது என்று உளமார எண்ணியதால்தான்.

வயது ஏற ஏற வாழ்க்கையைப் பற்றி, குடும்பத்தைப்பற்றி, சொந்தச் சுகத்தைப்பற்றிக் கவலைப்படாமல் துறவிபோல இரவு பகலென்று பாராமல், அலைந்து திரிந்து அரும்பாடுபட்டு, நாம் வாழ, அவர் வாட்டத்தையும் பாடுகளையும் தாங்கிக் கொள்கிறார் என்று தெரிந்ததால், நாம், அவர், பெரியார், எனும் பண்புப்

# பொருந்தாத் திருமணத்தைக் கண்டித்தார்

பெயருக்கு முற்றிலும் உரியார், இவர் போன்றார் வேறு யாரும் இல்லையென்று இறும்பூதெய்தி வந்தோம், இறுமாந்திருந்தோம்.

அவர் நமக்கு மற்றவர் சொல்லாததை யெல்லாம் சொன்னார்; மற்றவர் யாரும் விளக்காததை விளக்கினார். நம்மை நாம் உணரவும், நமது மானத்தை நாம் காப்பாற்றிக்கொள்ளவும் திட்டமிட்டுக் காட்டினார்.

அரசியலைப்பற்றியல்ல அவர் பேசிவந்தது, வாழ்க்கையைப்பற்றி, வாழ்க்கைச் சிக்கலை நீக்குவதுபற்றி, வாழ்விலே புதிய மாற்றங்கள் ஏற்படுவதற்கான வழிகளைப்பற்றி எடுத்துரைத்து வந்தார்.

தபோதனர்களும், அருள் பெற்றவர்களும், கூறியதாகச் சொல்லப்படும் கோட்பாடுகள் நமது வாழ்க்கையை, மனிதத்தன்மைக்கு மாறானதாக்கி விட்டன, என்பதை எடுத்துக் காட்டி, அந்தக் கட்டளைகளை மீறுங்கள், வாழ்க்கைக்குப் புதிய, ஆனால் புனிதமான இலட்சியத்தை அமைத்துக் கொள்ளுங்கள் என்று வீர உரையாற்றி வந்தார்.

வாழ்க்கைப் பிரச்னையிலே அவர் மிகச் சிறப்பாகவும், மிகத் தெளிவாகவும், எடுத்துப் பேசிவந்த பகுதி திருமணத்தைப்பற்றியது.

திருமண முறையிலேயுள்ள மூடப்பழக்க வழக்கங்களை முறியடிக்கவும், பெண்களைக் கருவிகளாக்கும் கயமைத்தனத்தை ஒழிக்கவும், ஆண்களின் கொடுமையை அடக்கவும் அவர் ஆற்றியது போல வேறு எந்தத் தலைவரும் உரையாற்றியதில்லை.

உரையுடனா நின்றது; இல்லை. ஊரே மாறிற்று. நமது உள்ளமே மாறிற்று. ரிஷிகள் வகுத்துவைத்து விட்டுப்போன திட்டங்களே மாறின; மகிழ்ந்தோம், பெருமை கொண்டோம்; ஆணவம் கொண்டோம்.

பொருந்தாத் திருமணத்தை அவர் கண்டித்தது கேட்டு, கிழவர்கள் கலங்கினர்; குமரிகள் குதூகலித்தனர்.

காமப்பித்துக் கொண்டலையும் ஆண்கள் வயோதிகப் பருவத்திலே வாலிபப் பெண்ணைச், சொத்து சுகம் கிடைக்கும் என்று ஆசைகாட்டியோ, வேறு எந்தக் காரணம் காட்டியோ திருமணத்துக்குச் சம்மதிக்கச் செய்தால், மானரோஷத்தில் அக்கரையுடைய வாலிபர்கள் அந்தத் திருமணம் நடைபெற இடந்தரலாமா என்று ஆயிரமாயிரம் மேடைகளிலே முழக்கமிட்டார்—நமக்கெல்லாம் புதுமுறுக்கேற்றினார்.

பிள்ளையில்லையென்ற காரணத்துக்காக சொத்துக்கு வாரிசுயில்லை என்ற காரணத்துக்காக, மனைவியைத் தேடும் கொடுமையை ஆயிரமாயிரம் மேடைகளிலே கண்டித்தார்.

பொருந்தாத் திருமணம் நாட்டுக்குப் பெரியதோர் சாபத்தீடு என்று முழக்கமிட்டார்.

அந்தக்காலத்துத் தசரதன் முதற்கொண்டு இந்தக்காலத்து "தங்கபஸ்பம்" தேடும் கிழவர் வரையிலே எள்ளி நகையாடினார்.

தன்மான இயக்கம் தழைத்திருக்கும் இடத்திலே "பொருந்தாத் திருமணம்" யார் வீட்டிலாவது, எந்தக் காரணத்தாலாவது நடைபெற இருந்தால், போலீஸ் பந்தோபஸ்துத் தேடக்கூடிய அளவுக்கு நாட்டு மக்களின் உணர்ச்சி வேகம் உருவெடுத்தது.

ஏற்கெனவே பொருந்தாத் திருமணம் செய்து கொண்டவர்கள்கூட, வெட்கத்தால்-வேதனையால் தாக்கப்பட்டனர்.

"என்போன்ற வயதானவர்கள், கல்யாணம் செய்துகொள்ள எண்ணக்கூடாது—எப்படியாவது, அப்படி ஒரு எண்ணம்வந்து தொலைந்தால், தும்பு அறுந்ததாக (அதாவது விதவையாக) ஒரு நாற்பது ஐம்பது வயதானதாக, ஒரு கிழத்தைப் பார்த்துக் கலியாணம் செய்து தொலைக்கட்டுமே—பச்சைக் கொடிபோல ஒரு பெண்ணை, வாழ்வின் சுகத்தை அறிய வேண்டிய வயதும், பக்குவமும் கொண்ட பெண்ணைக் கலியாணம் செய்து கொள்வதா—காரணம் ஆயிரம் காட்டட்டுமே, காட்டினாலும் எந்த மானமுள்ளவன், அந்தக் கலியாணத்தைச் சரியென்று கூறுவான்? யாருக்குச் சம்மதம் வரும்?" என்று அவர் பேசிய பேச்சுக் கேட்காத ஊரில்லை.

இப்படிப்பட்ட அறிவுரை புகட்டியவர், தமது 72-ம் வயதில் 26- வயதுள்ள பெண்ணை, பதிவுத் திருமணம் செய்து கொள்கிறார் என்றால், கண்ணீரைக் காணிக்கையாகத் தருவது தவிர வேறென்ன நிலைமை இருக்கும்!

"எப்பா! திராவிடர்கழகம்! உங்கள் தலைவருக்குத் திருமணமாமே!!" என்று கேட்கும் கேள்வி கூரம்பு போல நெஞ்சில் பாய்ந்து தொலைக்கிறதே.

சீர்திருத்த இயக்கம் இது—இதோ பாரய்யா "சீர்திருத்தம், 72-க்கும் 26-க்கும் திருமணம்" என்று கேலிபேசுகிறார்களே — கேட்டதும் நெஞ்சு வெடிக்கிறதே.

"கையிலே தடி மணமகனுக்கு! கருப்பு உடை மணமகளுக்கு!"—என்று பரிகாசம் பேசுகிறார்களே.

"ஊருக்குத்தானய்யா உபதேசம்!" என்று இடித்துரைக்கிறார்களே.

"எனக்கென்ன, வயதோ 70-க்கு மேலாகிறது ஒரு காலை வீட்டிலும் இன்னொரு காலைச் சுடுகாட்டிலும் வைத்துக்கொண்டிருக்கிறேன். நான் செத்தால் அழ ஆள் இல்லை, நான் அழுகிறபடி சாவதற்கும் ஆள் இல்லை," என்றெல்லாம் பேசின பெரியார் கலியாணம் செய்து கொள்கிறாரய்யா!"—என்று கடைவீதி பேசி கைகொட்டி சிரிக்கிறதே!

"ஊரிலே நடைபெறும் அக்ரமத்தைக் கண்டிக்கும் அசகாயச் சூரர்களே! சமுதாய இழிவுகளை ஓட்டும் வீராதி வீரர்களே! பெண் விடுதலைக்குப் பெரும்போர் தொடுக்கும் பெரியவர்களே! பொருந்தாத் திருமணத்தைக் கண்டித்த கண்ணியர்களே, இதோ உங்கள் தலைவர், துறவிக்கோலத்தில், தள்ளாடும் பருவத்தில் இளம் பெண்ணைத் திருமணம் செய்துகொள்கிறா

# காரணம் ஆயிரம் காட்டினாலும்!

உங்கள் கொள்கையின் கதி என்ன, எங்கே உங்கள் பிரச்சார யோக்கியதை; என்ன சொல்லுகிறீர்கள் இதற்கு, எப்படி இந்த அக்ரமத்தை, அநீதியை, அருவருக்கத்தக்க ஆபாசத்தைச் சகித்துக்கொள்கிறீர்கள்?" என்று சவுக்கடி கொடுக்கிறது போலப் பேசுகிறார்களே—இனியும் பேசப்போகிறார்களே—என்ன செய்வோம்—என்ன சமாதானம் கூறுவோம்—எப்படி மனப் புண்ணை மாற்றமுடியும்—எப்படி மானத்தைக் காப்பாற்றிக் கொள்வது என்று எண்ணினர்—எண்ணினதும் தாயோ, தகப்பனோ, மனைவியோ, மகவோ, அண்ணன் தம்பியோ, உடன் பிறந்தவர்களோ இறந்தால் ஏற்படக் கூடிய துக்கத்தை விட அதிகமான அளவிலே துக்கம் பீறிட்டுக் கிளம்பிக் கதறுகின்றனர்—கதறிக்கொண்டேயிருக்கிறோம் – கண்ணீருக்கிடையேதான், இக்கட்டுரையும் தீட்டப்படுகிறது.

பொருந்தாத் திருமணம்! புனிதத் தலைவரின் பொருந்தாத் திருமணம்! எந்தக்காலத்திலும், எதிரியின் எந்த வீச்சும், சர்க்காரின் எந்தநடவடிக்கையும், இன்று நமது இயக்கத் தோழர்களைத் திகைக்கச் செய்திருப்பது போலச், செய்ததில்லை.

பல நெருக்கடிகளைப் பார்த்திருக்கிறோம் — பல ஆபத்துகளைப் பார்த்திருக்கிறோம்—இந்தப்பேரிடியை நம்மால் தாங்கிக்கொள்ள முடியவில்லை — முடியாது—முடியாது—நிச்சயமாக முடியாது.

முகத்திலே கரி பூசிவிட்டார். மூக்கறுத்துவிட்டார்! மூலையில் உட்கார்ந்து கதறுகிறோம்—சேதி தெரிந்தது முதல்.

வெட்கப்படுகிறோம் அயலாரைக் காண!

வேதனைப்படுகிறோம் தனிமையில்!

ஒருவர் கண்ணீரை, மற்றவர் துடைக்க முயலுகிறோம்—துடிக்கிறோம் — நெஞ்சத்தில் துயரத்தேள் கொட்டியதால்.

பொருந்தாத் திருமணம் புரிந்துகொள்ளத் துணிபவர்களை, எவ்வளவு காரசாரமாகக் கண்டித்திருக்கிறோம்—எவ்வளவு ஆவேசமாகக் கண்டித்தோம்.

இப்போது, எவ்வளவு சாதாரணமாக நம்மையும் நமது உணர்ச்சிகளையும், கொள்கையையும், இயக்கத்தையும் எவ்வளவு அலட்சியமாகக் கருதி, நமதுதலைவர், 72-ம் வயதிலே திருமணம் செய்துகொள்வதாக அறிவிக்கிறார். நம்மை நடைப்பிணமாக்குவதாகத் தெரிவிக்கிறார்—நாட்டு மக்களின் நகைப்புக்கு இடமாக்கி வெட்கித்தலைகுனிந்து போங்கள், எனக்கென்ன என்று தெரிவித்துவிட்டார்.

அந்தோ! எவ்வளவு பெரிய தாக்குதல்! எத்துணை அவமானம் தரும் காரியம்! இதற்கோ இவ்வளவு எழுச்சி பெற்றோம்! இந்தப் பழியையும் இழிவையும் ஏற்றுக்கொள்ளவா, இந்த அளவு வளர்ந்தோம்.

என்னே நம் நிலை! என்னே நம் கதி! எங்கே நமக்குப் புகலிடம்! என்னதான் நமக்கு எதிர்காலம்! எதிரே பெரும் இருள்! சுற்றிலும் கேலி பேசுவோர்! இடையே நாம்! நெஞ்சிலே பெருப் வேதனை! கண்களிலே நீர்! கைகால்களிலே நடுக்கம்! இதுநாம்! இதற்கோ இந்த வளர்ச்சி!

எம்மை ஆளாக்கிவிட்ட தலைவரே! இந்தக் கதிக்கு எம்மை ஆளாக்கவா இவ்வளவு உழைப்பும் பயன்பட வேண்டும்? உலகின்முன் தலைகாட்ட முடியாத நிலைமையில் எம்மைச் செய்யும் அளவுக்கு நாங்கள் தங்களுக்கு இழைத்த குற்றம் என்ன? நீங்கள் காட்டிய வழி நடந்தோமே, அதற்கா இந்தப் பரிசு?

புயலை எதிர்த்துச் செல்லுங்கள் என்று தாங்கள் கட்டளையிட்டபோதெல்லாம், சரி என்று சொல்லால் அல்ல, செயலால் காட்டினோமே, அதற்குப் பரிசு இது தானா?

முத்தமிடவந்த குழந்தையின் மூக்கைக்கடித்தெறியும் தாயை நாங்கள் கண்டதில்லை, தந்தையே! நாங்கள் செய்த தவறுதான் என்ன, இந்தத்தகாத காரியத்தைத் தாங்கள் செய்து, எங்கள் தன்மானத்தை அறுத்தெறிவது ஏன்?

என்ன குற்றம் இழைத்தோம்?

ஏன், என்றும் அழியாத அவமானத்தைத் தேடித் தருகிறீர்.

எப்படித்தாங்குவோம் இந்த அழிவை!

எத்தனை ஆயிரம் காரணம் காட்டினாலும், சமர்த்தான விளக்கம் உரைத்தாலும், 72 — 26 — இதை மறுக்கமுடியாதே! இது பொருந்தாத் திருமணம் என்பதை மறைக்கமுடியாதே!

இதைச் சீர்திருத்தச்செம்மலாகிய தாங்கள்செய்வதென்பது காலத்தாலும் துடைக்க முடியாத கறை என்பதை மறுக்கமுடியாதே! ஏன் இதைச் செய்கிறீர், எம்மை ஏளனத்துக்கு ஆளாகவிடுகிறீர்!

கண்ணீரைத் துடைத்தபடி நின்று, ஆயிரமாயிரம் இளைஞர்கள் கேட்கும் கேள்விகள் இவை!

இருதயத்துடிப்பு! ஒருநாள் பழகியவர்கூட உளம் உருகிவிடும், பேச்சு—இதையும் ஏற்க மறுக்கிறார் எமது தலைவர்!

இந்தப் பொருந்தாத் திருமணம் நடைபெறக்கூடுமென்று, நாம், யாரும், கனவிலும் எண்ணியதில்லை. பெரியாரின் கோலம், வயது, பேச்சு, வாழ்க்கையிலே அவருக்குப்பற்று அற்றதுபோலிருந்து காட்டியதன்மை ஆகியவை நம்மை, அவருடைய மனதிலும் ஒரு "மாது" புகமுடியும் என்று எண்ணச் செய்யவில்லை. அதிலும் எப்படிப்பட்ட மாது?

பெரியாரின் உயிரைப் பாதுகாக்க, உடலைப் பாதுகாக்க, தக்கவிதமான உணவு, மருந்து தருதல், பிரயாண காலத்தில் வசதி செய்து தருவதுபோன்ற காரியத்தைக் கவனிப்பது, என்கிற முறையில், இயக்கத்தில் ஐந்தாறு வருஷத்துக்கு முன்பு, வந்தவர்கள் மணியம்மையார்.

ஊர், வேலூர்! தகப்பனார் கனகசபை முதலியார்! அவரும் இயக்கப் பற்றுடையார்! அவர் இறந்துபட்

# முகத்திலே கரி பூசிவிட்டார்

டார்—மணியம்மையாரின் படிப்பும் நின்றது—பெரியாரின் தொண்டுக்காகப் புறப்பட்டார்.

பெரியாருக்கு, மகனோ, மகளோ இல்லை—மணி அம்மையாரின் ஆரம்பகாலத் தொண்டு போன்ற தொண்டு புரிய! ஆனால் அண்ணன் உண்டு, அவர்களுக்கு திருமகள் இருவர், புத்திரர்கள் மூவர்—தமக்கை உண்டு—அவர்களுக்குக் குமாரிகள் மூவர், குமாரர்கள் இருவர்—அனைவரும், வேலூரிலிருந்து வேற்றுக் குடும்பத்துப் பெண்வந்து சேருமுன்பு, பெரியாருக்குப் பணிவிடை செய்வதிலோ, இயக்கப் பணி புரிவதிலோ ஈடுபடாமலிருந்தவர்கள் அல்ல.

சில மாநாடுகளில் தோழியர்கள் காந்தி B. A., மிராண்டா B.A., என்னும் இருவரும் கலந்துகொண்டது உண்டு. அவர்கள், பெரியார் குடும்பத்தினர்தான்.

இவர்கள் மட்டுமல்ல, பெரியாரின் உடற்பாதுகாப்புக்கான பணிபுரிய, நான் நீயென்று போட்டியிட்டுக் கொண்டு வர நூற்றுக் கணக்கிலே தூய உள்ளம் படைத்தவர்கள் உண்டு.

அவர்கள் யாரும் தேவைப்படவில்லை; மணியம்மை வர நேரிட்டது!

புயல் நுழைகிறது என்று கருதியவன் நான்.

புல்லன் என்று தூற்றப்பட்டேன், அதனால்.

அந்த அம்மையாரின் அருந்தொண்டு கண்டு, திராவிடர்கள் முதலிலே கொண்டிருந்த அருவருப்பையும் இழந்தனர்.

அப்பா! அப்பா! என்று அந்த அம்மை மனம் குளிர, வாய் குளிர, கேட்போர் காது குளிரக் கூறவும். அம்மா—அம்மா, என்றுகேட்போர் பெருமையும் பூரிப்பும் அடையும் விதமாக, பெரியார் அந்த அம்மையாரை அழைக்கவும், இக்காட்சியைக் கண்டு, பெரியாரின் வளர்ப்புப் பெண் இந்த மணியம்மை எனப் பல்லாயிரவர் எண்ணி மகிழவுமான நிலை இருந்தது.

அந்த வளர்ப்புப் பெண்தான், இன்று பெரியாரின் மனைவியாக இருக்கிறார்கள்—பதிவுத் திருமணமாம்!!

இந்த நிலையை யார்தான் எந்தக் காரணங்கொண்டுதான், சாதாரணமானதென்று சொல்ல முடியும்.

நூற்றுக்கணக்கான மாநாடுகளிலே, நமது வீட்டுத் தாய்மார்கள் தமது கரம் பற்றி நின்ற குழந்தைகளுக்குப் பெரியாரைப் பெருமையுடன் காட்டி "இதோ, தாத்தா பார்—வணக்கஞ் சொல்லு" என்று கூறினர்—கேட்டோம்—களித்தோம்!

பக்கத்திலே பணிவிடை செய்து நின்ற மணியம்மையைக் காட்டி, "தாத்தா பெண்ணு," என்று கூறினர்.

அந்தத் தாத்தாவுக்குக் கலியாணம், பணிவிடை செய்து வந்த பாவையுடன்!

சரியா? முறையா? என்று உலகம் கேட்கிறது.

பெரியாருக்கு, இயக்கத்திலேயும், சொந்த முறையிலேயும் வேண்டியவர்கள், நண்பர்கள், என்பவர்கள் சில பலர் உண்டு.

என்னிடத்திலே பெரியார் இன்ன விஷயமாகக் கலந்து பேசினார்—என்னை இன்ன காரியம் செய்யச் சொன்னார் என்று களிப்புடன் கூறிக்கொள்பவர்கள் ஒவ்வொரு ஊரிலும் சில பலர் உண்டு.

சென்னையிலே இதுபோன்று பலர் உண்டு. (எனக்கும் அந்த வாய்ப்பு இருந்ததுண்டு, இடையிலே அறுந்தும் போயிற்று.—C. N. A.)

இவ்வளவு பேர் இருந்தும், இந்தத் திருமண விஷயமாக, பெரியார் இவர்களில் யாரிடமும் பேசி தில்லை—யோசனை கேட்டதில்லை ஜாடையும் காட்டி தில்லை.

மோட்டாருக்குப் பெட்ரோல் வாங்கித் தருவது ஆபீசுக்கு பேப்பர் வாங்குவது, நிதிக்குப் பணம் பெற்றுத் தருவது போன்ற அலுவலுக்கு மட்டுமேதான் அவர்கள் தேவைப்பட்டார்கள்.

இன்ன ஊரில், இன்ன இடத்தில் மாநாடு கூட்டு அதற்கான ஏற்பாடு செய், என்று கூறிட மட்டுமே அவர்கள் தேவைப்பட்டார்கள். இந்தத் திருமண விஷயமாக, பெரியார், இப்படிப்பட்ட நண்பர்க யாரிடமும் பேசியதில்லை.

எனக்குத் தெரியாதே! என்னிடம் சொன் தில்லையே! என்று ஒவ்வொருவரும் திகைப்புட கூறுகின்றனர்.

"தங்களிடம் பெரியாருக்கு பெருமதிப்பு உண்டே ஒரு சமயம் உங்களிடம் சொன்னாரா, விருந்து சா பிட்ட அன்று வந்திருந்தாரே சொன்னாரா" என் முன்னாள் அமைச்சர், முத்தய்யமுதலியாரைக் கேட்டு பார்த்தோம்—"தெரியாதே! ஜாடையாகக்கூட சொ வில்லையே" என்று அழுகுரலில் அவர் கூறினார்.

"அரசு! உனக்குத் தெரியுமாமே!" என்று கே டால் "ஐயோ நான் அறியேனே, என்னை வெளி இருக்கச் சொல்லிவிட்டு, பெரியார் தனியாகச் சென் தான் ரிஜிஸ்ட்ராரிடம் பேசிக் கொண்டிருந்தார் என்று கூறுகிறார், பெரியாரின் பணிவிடைப் பணி வரிசையில் முக்கியஸ்தராகிய C. D. T. அரசு.

"அவருடன் நேற்றுவரையில் சுற்றுப் பிரயாண தில் ஈடுபட்டிருந்தீரே, உமக்குத் தெரியுமா இதுபற்றி என்று கேட்டால் "தெரியாதே" என்று கூறித் தேம் கிறார் தோழர் N. V. நடராசன்.

அண்ணன் மகனும், விடுதலைக்கு மானேஜருமா E. V. K. சம்பத், இதை அறியார்.

விடுதலை ஆசிரியர் தோழர் குருசாமிக்குத் தெ யாது—பொருளாளர் கோவிந்தசாமிக்குத் தெரியாது- இவர்கள் யாரும் அறியார்கள். யாரிடமும் இதுபற் பேசினதில்லை—ஜாடைமாடையாகக்கூடப் பேசியதில்

ஆனால் இதுபற்றிக் கவர்னர் ஜெனரல் ராஜகோ லாச்சாரியிடம் திருவண்ணாமலையில் கலந்து பேசியி

# வளர்ப்புப் பெண்தான்—மனைவி?

கிருர், நமது தலைவர், தமது அறிக்கையிலே இதை அவரே கூறுகிருர். உங்கள் யாரிடமும் நான் பேசாத, பேசவேண்டிய அவசியமில்லாத விஷயத்தை, அவரிடம் பேசினேன் என்று கூறுகிருர்.

அவர் பாக்கியசாலி! உண்மையிலேயே உழைத்து உருக்குலைந்து போய் இவர் தவிர வேறு ஒரு தலைவரே கிடையாது என்று மனமார நம்பி, செக்குமாடென உழைத்துவரும் நாம் பெறவில்லை அந்த பாக்கியத்தை! அன்பர் ஆச்சாரியார் பெற்ருர்!

(கோவை மாநாட்டிலே கேட்டேன், என்ன பேச்சு உமக்குள் என்று; கேட்டது தவறு என்றனர் பலர். C. N. A.)

ஆச்சாரியாருடன் கலந்து பேசிய பிறகும், இயக்கத் தோழர்களில் யாரிடமும் இதுபற்றி மூச்சுவிடாமல், மிக மிக ரகசியமாக, இந்தத் திருமண ஏற்பாட்டினுக்கான காரியத்தைத் துவக்கினர். எப்படியோ உண்மை தலைகாட்டிற்று; உளம் கொதித்த தோழர் N. V. நடராசன் பெரியாருக்குக் கடிதம் தீட்டினர், கண்ணீர் மல்கிய நிலையில்.

கடிதம் அலட்சியப்படுத்தப்பட்டது. சென்னையை விட்டு ஈரோடு போவதாகக் கூறிவிட்டு ஏற்காடு சென்று தங்கினர், பெரியார், மணியம்மை சகிதம்.

இங்கு சேதி தெரிந்தவர்கள் துடித்தனர், அழுதனர், தூது செல்வதென்று முடிவு செய்தனர்—முதற் தூதுக்கோஷ்டி கிளம்பிற்று.

விடுதலை ஆசிரியர் குருசாமி, கடலூர் தோழர் குருசாமி, வேலூர் திருநாவுக்கரசு, தோழர் N. V. நடராசன், குடந்தைத் தோழர் K.K. நீலமேகம் ஆகியோர் சென்றனர்.

திராவிட கழகத்தாரின் திகைப்பை, பொதுமக்களின் கேலியுரையைக் கூறினர், கெஞ்சினர். பெரியார் இவர்களிடம் விளக்கம்—சமாதானம் கூறினர், தடுமாற்றத்துடன் அல்ல, உறுதியுடன்.

தான் செய்யும் காரியம் தவறுடையதோ என்று சந்தேகம் இருக்கும் விதமாக அல்ல; நீங்கள் யார் என்று கேட்கும்விதமாகவே பேசினர்.

மற்ரேர் தூதுகோஷ்டி கிளம்பிற்று. 'தமிழ் நாடு' ஆசிரியர் பார்த்தசாரதி, 'போர்வாள்' ஆசிரியர் காஞ்சி மணிமொழியார், சென்னைத் திராவிடர் கழக அமைப்பாளர் கண்ணபிரான், இந்தி எதிர்ப்பு போர்படைத் தலைவர்களில் ஒருவரான சி. வி. ராஜன்.

அவர்களிடமும் பெரியார் தாம் தமது முடிவை மாற்றப் போவதில்லை யென்றும் நாலு நாள் கூவிய பிறகு மக்கள் தாஞக அடங்கிவிடுவார்களென்றும் கூறியனுப்பினர்.

இதற்கிடையில் பல கடிதங்களும் அவருக்கு அனுப்பப்பட்டன. இவ்வளவும் திருமண ஏற்பாட்டைத் தடுக்க உதவவில்லை.

கூட்டாகக்கருத்தைத்தெரிவித்தலேமுறையென்று எண்ணி, பெரியார் இல்லத்திலேயே 27—6—49-ல் சென்னை ஜில்லா திராவிடர் கழகக் கூட்டம் நடைபெற்றது. அதன் விவரம்:—

* * *

## சென்னை மாவட்ட திராவிடர் கழக நிர்வாகக் கமிட்டி அவசரக் கூட்டம்

வருத்தமும் கண்டனமும்—

சென்னை, ஜூன் 28—

சென்னை மாவட்டத் திராவிடர் கழக நிர்வாகக் கமிட்டியின் அவசரக் கூட்டம் ஒன்று நேற்று மாலை 6-30 மணிக்கு, மவுண்ட்ரோட் மீரான் சாயபு தெரு 1-வது (பெரியார்) இல்லத்தில் நடைபெற்றது. மாவட்டத் தலைவர் தோழர் சி. தங்கராஜ் அவர்கள் தலைமை வகித்தார். கீழ்க்கண்ட இயக்கப் பிரமுகர்களும், நிர்வாக உறுப்பினர்களும் வந்திருந்தனர்.

தோழர்கள் சி. தங்கராஜ் (மாவட்டத் தலைவர்) ஆர். டி. அரசு, எ. கே. சாமி, சி. ஆர். சின்னப்பன், கே. பக்தவத்சலம், பா. குருசாமி, பி. எஸ். ராமலிங்கம், சே. தேவசகாயம், இ. வி. ராஜன், மா. இளஞ்செழியன் (பி. ஏ. ஆனர்ஸ்), சத்யவாணி முத்து, சி. வி. ராஜன், எ. சுப்ரமண்யம், ஆ. கபாலமூர்த்தி, கா. சொக்கலிங்கம், பா. கோவிந்தராசன், எம். எஸ். மணி, எம். சண்முகம், எஸ். எஸ். ராகவலு, ஆர். கோவிந்தசாமி, எ. ஜெயராஜ், வி. கன்னையா, மா. சம்பந்தன், கா. சிதம்பரம், வி. நெடுமாறன், கோ. செங்குட்டுவன், டி. எம். பார்த்தசாரதி, எம். ரகுநாதன், புலவர் செல்வராஜ், சி. கே. நாதன், முத்துகிருஷ்ணன், கா. சம்பந்தன், க. அலின், ர. இலக்குமணன், ஏ. வி. பாலசுந்தரன், பி. ஏ. எல். டி., த. பாலசுப்ரமண்யன், சே. ஆரோக்யதாசன், சு. நடராசன், பி. துரைசாமி, டி. எ. சித்தார்த்தன், வல்லி. துரைராசன், ஆர். கே. முனுசாமி, அ. சங்கரய்யா, எம். ராஜி, வி. கே. சுப்பராயலு, சினி. வெங்கடசாமி, ஏ. சாமிநாதன், வி. எஸ். வாசன், மா. பிரான்சிங், மாசிலாமணி, சிவஞானம், சொ. கொ. முத்துக்குமாரசாமி, சி. டி. டி. அரசு, டாக்டர் கணேசன், பாவலர் அப்துல் காதர், வி. டி. பெரியசாமி, கே. கோவிந்தசாமி (செயலாளர்), கே. எம். கண்ணபிரான் (அமைப்பாளர்), என். வி. நடராசன், காஞ்சி மணிமொழியார் (தந்தி மூலம்) ஆகியோர்.

கமிட்டி கூட்டத் துவக்கத்தில் தலைவர் தோழர் சி. தங்கராஜ், செயலாளர் கே. கோவிந்தசாமி ஆகியோர் பெரியார், கே. எ. மணி ஆகியோரின் பொருந்தாத் திருமணத்தையும் அதனல் இயக்கத்திற்கு ஏற்படும் பெரும் கேட்டினையும் விளக்கிக் கூறினர். தொடர்ந்து தோழர்கள் சி. டி. டி. அரசு, கே. எம். கண்ணபிரான், டி. எம். பார்த்தசாரதி, மா. இளஞ்செழியன், பாவலர் அப்துல் காதர், என். வி. நடராசன் ஆகியோர் நகரில் இதுபற்றி ஏற்பட்டுள்ள நிலையையும், பெரியார் அவர்களிடத்தில் நேரில் பேசியது பற்றியும் எடுத்துக் கூறினர். பின்னர் கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஒரே மனதாக நிறைவேற்றப் பட்டன.

1\. திராவிடர் இயக்கத் தலைவர் பெரியார் அவர்

# நீங்கள் யார் என்று கேட்கிறார்!

களுக்கு வணக்கமுடன் விண்ணப்பித்துக் கொள்வது, தாங்கள் தங்கள் 72-வது வயதில் 26-வயதான தோழியர் கே. எ. மணி அவர்களை பதிவுத் திருமணம் செய்து கொள்ளப்போவதாக, ரிஜிட்ரார் ஆபீசிலும், பத்திரிகைகளிலும், வெளிவந்துள்ளதைக் கண்டு இக்கமிட்டி வருத்தத்துடன், இவ்வேற்பாடு எல்லா வகையிலும் இயக்கத்திற்கு இழுக்கு நேரிடுமாதலால், இதை உடனே ரத்து செய்யவேணுமாய்க் கேட்டுக் கொள்வதுடன் ரிஜிட்ராருக்கு கொடுத்துள்ள விண்ணப்பத்தை உடனே வாபஸ் பெறுமாறு இக்கமிட்டி கேட்டுக் கொள்கிறது.

2. தாங்கள் தங்களது திருமண முயற்சியை வாபஸ் பெற்றுவிட்டதாக உடனே பத்திரிகைகளுக்கு அறிக்கை வெளியிட வேண்டுகிறோம். அப்படி வாபஸ் பெறவில்லை யென்றால், பொதுக் கூட்ட மூலம் மேலால் கண்டிக்க வேண்டியிருக்கு மென்பதை வருத்தத்துடன் இக்கமிட்டி தெரிவித்துக் கொள்கிறது.

3. மேற்படி ஏற்பாட்டை வாபஸ் பெறுமாறு சென்னை மாவட்ட திராவிடர் கழகம் செய்திருப்பது போன்று ஒவ்வொருமாவட்ட நிர்வாகக்கமிட்டியினரும், முக்கியஸ்தர்களும் உடனே தீர்மானம் நிறைவேற்றித் தலைவர் பெரியார் அவர்களுக்கு அனுப்புமாறு வேண்டிக் கொள்கிறது.

(ஒப்பம்) கே. கோவிந்தசாமி
பொதுச் செயலாளர்,

நெ. 5, காளப்ப ஆச்சாரி தெரு, பி. டி. மதருஸ்.

* * *

இவைகளுக்குப் பிறகு நம்மையெல்லாம் திடுக்கிடச் செய்து, தேம்பச் செய்து, ஊராரின் கேலியைக் கிளப்பிவிட்ட திருமண ஏற்பாட்டுக்கு பெரியார் ஓர் அறிக்கைமூலம்விளக்கம்அளித்தார்-அந்த விளக்கம்இப்போது நடைபெற இருக்கும் திருமணம் என்பது இத்துடன் முடிந்துவிடும் செயல் அல்ல—பின்னால் வரவிருக்கும் பேராபத்துக்கு, பெரியதோர் இழிவுக்கு, முன்னறிவிப்பு என்பதைத் தெளிவாகக் காட்டுகிறது.

மணி அம்மை, பெரியாருக்கு மனைவிமட்டுமல்ல—இயக்கத்துக்குத் தலைமை தாங்கும் தகுதி பெறப் போகிறார்.

புதிய அனிபெசண்ட் புறப்படுகிறார்களாம்!

பெரியாரே! இப்படி ஒரு அநியாயமான, கொள்கைக்கு முரணான: நாகரிக மக்கள் நகைக்கத் தக்க, பொருந்தாத் திருமணம் செய்து கொள்கிறீரே," இது சரியா என்று கேட்கிறோம்,

"போடா போ! நான் திருமணம் மட்டுமா செய்து கொள்கிறேன், இயக்கத்தையே மணியம்மையிடம் தான் ஒப்படைக்கிறேன். அப்படி ஒப்படைப்பதற்காகவே தான் திருமணம் செய்து கொள்கிறேன்" என்று கூறுகிறார் அறிக்கையில்.

'ஐயோ, என் புருஷனை ஏன் கொல்லுகிறாய் என்று பதைத்துக் கேட்கும் பாவையைப் பார்த்து, அவனைக் கொல்வது காரணமற்று என்று எண்ணுகிறாய், உன்னைப் பெண்டாளவே அந்தக் காரியம் செய்கிறேன்' என்று துணிந்து கூறுவதுபோல இயக்கத்தையும், இயக்க சொத்தையும், இயக்க நடப்பையும் எனக்குப் பிறகு நடத்திச் செல்லும் பொறுப்பை, வாய்ப்பை மணியம்மைக்குத் தருவதற்காகவே "அதை" எப்படியாவது சட்ட பூர்வமாக என் "வார்சு" ஆக்கிக்கொள்ளத் தீர்மானித்துவிட்டேன் என்று தெரிவிக்கிறார்.

நடைபெறப் போவது பொருந்தாத் திருமணம் மட்டுமல்ல, புதிய மகுடாபிஷேகமும்.

ஒருதவறு இன்னொருதவறுக்குக்காரணமாகக் காட்டப்படுகிறது. பொருந்தாத் திருமணத்தால் ஏற்படும் இழிவையும், பழியையும் நாம் தாங்கிக்கொள்வதுமட்டுமல்ல, இந்தத்தகாத முறையினால்"தலைவி"ஆகப்போகும் மணியம்மையின் கீழிருந்து நாம் எதிர்காலத்தில் பணியாற்றவும் தயாராகவேண்டும்!

"நான் செங்கற்பட்டு சுயமரியாதை மாநாட்டிலேயிருந்து இயக்கத்தில் இருக்கிறேன்"

"நான் குடி அரசு ஆரம்பகாலத்திலிருந்து இயக்கப்பணி புரிகிறேன்"

"எங்கள் ஊரிலேயே நான் ஒருவன் இருந்து கொண்டு ஊர்ப்பகையையே சமாளித்திருக்கிறேன்"

"இதோபார் இந்தத் தழும்பு, இன்னஊர்க்கலகத்திலே எனக்கு ஏற்பட்டது"

"நான் வாரத்தில் ஆறுநாள் பிரசாரம் செய்பவன்"

"நான் எதிர்கட்சிப் பத்திரிகைகளுக்கு எதிர்ப்பு எழுதுவதில் நிபுணன்"

என்று பல பாத்தியதைப் பேச்சு பேசுபவர்கள் இயக்கத்தில உண்டு. அதிககாலமாகப் பணியாற்றியவர்கள் உண்டு.

திறமையாகப் பணி புரிந்தவர்கள் உண்டு.

குடும்பத்தைப் பகைத்துக்கொண்டு பணி புரிந்தவர்கள் உண்டு.

சொத்தை, சுகத்தை இழந்தவர்கள் உண்டு!

கண்ணையும் கரத்தையும் இழந்தவர்கள் உண்டு.

இவர்கள் யாரும் வார்சாக முடியவில்லை. இவர்களில் யாருக்கும் இயக்கத்தை நடத்திச் செல்லும்வாய்ப்புக்கிடைக்கவில்லை. மணியம்மைக்குக் கிடைத்திருக்கிறது.

எந்த முறையில்? பெரியாரின் துணைவியாகும் முறையில!

என்ன தகுதியால்?

பெரியார் தமது அறிக்கையில் கூறுகிறார், "நான் 5, 6, வருஷகாலமாகப் பழகி, நம்பிக்கை கொண்டதும், என்நலத்திலும், இயக்க நலத்திலும், உண்மையான பற்றும், கவலையும் கொண்டு நடந்து வந்திருக்கிறதுமான மணியம்மையை" என்று.

இதுதான் பொருந்தாத் திருமணத்துக்கும் அதன் மூலம் பொறுக்கமுடியாத புதிய பட்டாபிஷேக ஏற்பாட்டுக்கும் காரணமாம்!

அவர் அம்மையுடன் 5, 6, வருஷம் பழகினாராம். அந்தப் பழக்கம் அம்மைக்குள்ள அபாரமான அறிவாற்றலை அவருக்கு விளக்கிவிட்டிருக்கிறது. ஒரு பெரிய

# புதிய அனிபெசண்ட் புறப்படுகிறார்

இயக்கத்தையே ஒப்படைக்கும் அளவுக்கு நம்பிக்கை பெரியாருக்கு ஏற்பட்டுவிட்டது.

அம்மையும் ஆச்சாரியார் போலவே உண்மையில் பாக்கியசாலிதான்.

இல்லையானால் பெரியார், "என் ஆயுள்வரையும், கூடுமான அளவு என் ஆயுளுக்குப்பின்னும், ஒழுங்காக இயக்கத்தை நடத்தும் தகுதி, இந்த மணியம்மைக்கு உண்டு என்று கூறுவாரா?"

"பத்தாவதுவரை படித்துமிருக்கிறது" என்று இரண்டாவது தூதுகோஷ்டியிடம் பெரியார், கூறினாராம்.

அவர் நலத்திலும், இயக்க நலத்திலும், உண்மையான பற்றும், கவலையும், இயக்கம் இருபது முப்பது பேர்கொண்ட அளவாகயிருந்த காலம் முதற் கொண்டு பாடுபட்டு வந்த, எதிரிகளிடம் அடி உதை பட்டு வந்த யாருக்கும் கிடையாதது, இந்த அம்மைக்கு உண்டு. இந்தச் சூட்சமம் நமது தலைவர் அம்மையுடன் பழகிய 5, 6, வருட காலத்திலே கண்டறிந்தது.

கொள்கையை மறந்து, பொருந்தாத் திருமணம் புரிந்து கொண்டாவது அந்த அம்மையை நமக்குத் "தலைவி" ஆக்குகிறார். இயக்கத்துக்கு வார்சாக வேண்டுமாம்!!

ஹைதராபாத் நிஜாமுக்கு இருக்கவேண்டியகவலை, ஆதீன கர்த்தாக்களுக்கு ஏற்பட வேண்டிய கவலை, பகுத்தறிவியக்கத் தலைவருக்கு ஏன் ஏற்படுகிறதோ தெரியவில்லை!

வார்சுமுறை எதற்கு? யார் செய்யும் ஏற்பாடு? எந்தக் காலத்து முறை?

ஒரு இயக்கத்துக்கு "வார்சு" ஏற்படுத்துவது என்பது ஜனநாயக முறைக்கு ஏற்றதுதானா? அல்லது நடைமுறையிலே வெற்றி தரக்கூடியதுதானா?

திராவிடர்கழகம், அதற்கெனஉள்ளதாகக் கூறப்படும் சொத்து என்பது, இன்னொருவருக்கு வார்சு முறைப்படி தரப்பட வேண்டியகாட்டுராஜாங்கம்தானா?

இதற்காகத்தானா வெள்ளிக்குண்டுகளை வீசுங்கள், வேலை நடப்பதைப் பாருங்கள் என்று "விடுதலை" முழக்கமிட்டது!

இயக்கத்திலே, இன்று தலைவராக இருப்பவருக்கு, இயக்கத்திலுள்ள யாராவது துரோகி, கேடு செய்பவன் என்று தோன்றினால், நிரூபிக்க முடியுமானால், அப்படிப்பட்டவர்களை விரட்டிவிட்டு, இயக்கத்தை உண்மையான இயக்கப் பற்றும், செல்வாக்கும் உள்ளவர்கள் தனக்குப் பிறகு நடத்திச் செல்வதற்கு இடமளித்து விடுவது முறையேயொழிய, என் வார்சிடம் ஒப்படைக்கிறேன் என்று பரம்பரை பாத்தியதை பேசுவதா? அதற்காகப் புதிய பரம்பரையைத் தேடுவதா?

19-ந்தேதி தலைவர் வெளியிட்ட விளக்கத்தில், அவர் ஏற்பாடு எவ்வளவு ஆழ்ந்த கருத்துடையதென்பதைக் காட்டியிருக்கிறார்.

"எனக்கு வார்சாக ஒருவரை ஏற்படுத்தி அவர் மூலம் ஏற்பாடு செய்துவிட்டுப் போகவேண்டும் என்றும் அதிக கவலை கொண்டிருக்கிறேன்" என்று விளக்கத்தில் கூறுகிறார்.

இவர் ஏற்படுத்தும் "வார்சு" எதற்கு என்பது இதன் மூலம் விளக்கப்படுகிறது— இந்த "வார்சு" ஆகும் தகுதி மணியம்மைக்குத்தான் இருக்கிறது. அந்த அம்மையை "வார்சு" ஆக்குவதற்கு மற்றெந்த ஏற்பாட்டையும் விட அம்மையை மனைவியாக்கிக் கொள்ளும் முறைதான் தலைவருக்குச் சரி என்று படுகிறது.

இதை கேட்டுக் கொள்—இல்லையானால் உன்னை ஒழித்துவிடுவேன் என்ற முறையில் அறிக்கை வருகிறது. மேலும் பல வெளிவரக் கூடும்.

"இயக்கத்திலே உள்ள எவரிடமும் எனக்கு நம்பிக்கையில்லை. எனக்கு, என் நம்பிக்கைக்கு உரியவர்களாக யாரும் தென்படவில்லை. இயக்கத்தை நடத்திச் செல்லும் தகுதியும் திறமையும், வேறுயாருக்கும் இருப்பதாக நான் எண்ணவில்லை."

என்ற இந்தக் கருத்துக்களைப் பெரியார் இதற்கு முன்பும், பல தடவை கூறியிருக்கிறார் என்ற போதிலும், "ஏதோ இவர்மேல் உள்ள கோபத்தால் கூறுகிறார்—அவரை மிரட்டக் கூறுகிறார் — கோபத்தால் பேசுகிறார்" என்றே இயக்கத் தோழர்கள் எண்ணி வந்தனர். இப்போது தெளிவுபடுத்திவிட்டார்.

"எனக்கு உங்கள் யாரிடமும் நம்பிக்கைக் கிடையாது; அதுமட்டுமல்ல, எனக்கு மணியம்மை ஒருவரிடந்தான் நம்பிக்கை இருக்கிறது. எனவே நான் அவரை என் "வார்சு" ஆக்குகிறேன் என் மனைவியாகப் பதிவுசெய்வதன்மூலம்" என்று திட்டமாகக் கூறுகிறார்.

பெரியார் தமக்குள்ள பிரசாரத் திறமையினால், இதை, கட்சியை நிரந்தரமாக்க, துரோகிகளை முறியடிக்க, திருமணம் என்ற பேரால் பெரியார் புகுத்தும் புரட்சிகரமான திட்டம்" என்று கூட இனி விளக்க ஆரம்பிப்பார்.

ஆனால் நாம் யோசிக்க வேண்டியவர்களாகிறோம்; தலைவருடைய நம்பிக்கைக்கே பாத்திரமாக முடியாத நாம் அவருடைய தலைமையின் கீழ்ப் பணியாற்றி என்ன பயன் என்று.

நம்மை நம்பாதவரை, நாம் எப்படி நம்புவது? ஏன் நம்பவேண்டும்?

நம்மை நம்பமுடியாது என்று கூறும் தலைவர், மணியம்மையிடம், இவருக்கு நம்பிக்கையிருக்கிற ஒரே காரணத்துக்காக மணியம்மையைத் தலைவியாகக் கொள்ளும் அளவுக்கு எப்படி நம்பமுடியும்? ஏன் நம்பவேண்டும்?

அம்மை விஷயமாக இதுவரை நாம் கொண்டிருந்த நம்பிக்கையே இப்போது நாசமாகிவிட்டதே.

நாம் இதுவரை அம்மையை திராவிடத்தந்தைக்கு உபசாரம் செய்து வந்த மகள் என்று நம்பிவந்தோம்—அல்ல, மகள் என்று சட்டப்படி கூறமுடியாது, மனைவியென்று கூறவேண்டும் என்று பதிவுத்திருமணம் தெரிவிக்கிறதே, இந்நிலையில பெரியாரின் அறிக்கை, பொருந்தாத் திருமணத்தைக் கேட்டு அழுதுகொண்டிருப்பவர்களுக்கு மேலும் ஒரு வேதனையைத் தந்தது

# நம்மை நம்பாதவரை நாம் எப்படி நம்புவது?

நம்மை, உன்னிடம் நம்பிக்கை யற்றவருடன் இராதே, அவருடைய தலைமையிலே பணியாற்றாதே, ஓடு, ஓடு என்றுதானே கூறுகிறது.

பொருந்தாத் திருமணம் என்று கேள்வியுற்றதும், வெட்கப்பட்டோம்—அதற்குப் பெரியார் தந்த அறிக்கை நமக்கு வேதனையை ஊட்டியது.

இதோ விரட்டப்படுகிறோம், நாம் கட்டிய கோட்டையிலிருந்து, நாம் பாடுபட்ட களத்திலிருந்து தந்தை மக்களை விரட்டியடிக்கிறார், புதிய வார்சு தேடிக் கொண்டு.

திக்கற்றவர்களாகி, திகைப்புண்டவர்களாகி, பாடுபட்டதின் பலனைப் பறிகொடுத்து விட்டு, குடிபுகுந்த குமரி கோலோச்ச முற்படுவது கண்டு, குமுறி, குன்றி, கோவெனக்கதறிக்கொண்டு, நமது வீட்டைவிட்டு வெளியேறுகிறோம்.

உள்ளேயிருந்து கொண்டு, அவர் உத்தரவிடுகிறார், "இந்த அம்மை என் மனைவி, உங்களுக்குத் தலைவி, இருக்க இஷ்டமா இல்லையா" என்று கேட்கிறார்.

இந்த அறிக்கையைக் கண்டபிறகு கூடிய கட்சித் தோழர்கள் கீழ்க்கண்ட முடிவுக்கு வந்திருக்கிறார்கள்.

* * *

## பெரியார் விளக்கம்

### திருப்தி யளிக்கவில்லை.

### சென்னை மாவட்டக் கூட்டத்தில் தீர்மானம்

சென்னை மாவட்ட திராவிடர் கழக நிர்வாக உறுப்பினரில் பலரும், இயக்க முக்கியஸ்தர்களுமான கீழ்க்கண்டவர்கள் 28—6—49 இரவு 8-30 மணிக்குக் கூடி, பெரியார் அவர்கள் தமது திருமண சம்பந்தமாய் 28 6—49 தேதி விடுதலையில வெளியிட்டுள்ள அறிக்கை எவ்வகையிலும் திருப்தியளிக்கவில்லை என்பதைத் தெரிவித்துக் கொண்டதுடன், இதுபற்றிமேலால் எடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கும் எதிர்ப்பாகஇருந்து ஆவன செய்வதென்றும் ஒவ்வொருவரும் தனித்தனியாகத் தங்களது எண்ணத்தையும் உறுதியையும் தெரிவித்தனர்.

மேலும் இந்தி எதிர்ப்பு விஷயமாகத்தலைவர் அவர்கள் தீவிரநடவடிக்கை எடுக்க முக்கியஸ்தர்கள் கூட்டமோ அல்லது கமிட்டிக்கூட்டமோ நடத்தினாலும், அது சமயத்திலும் தமது திருமண விஷயமாயும் இயக்க விஷயமாயும் கொண்டுள்ள ஏற்பாட்டை ரத்து செய்யாதவரை ஒத்துழைக்க முடியாதென்பதையும் தெரிவித்து விடவேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது.

### கூட்டத்திற் கலந்து கையொப்பமிட்டவர்கள்

C. D. T. அரசு, காஞ்சி மணிமொழியார், மா. இளஞ்செழியன், A. S. வேணு, R. S. மணி, C. தங்கராசு, ச. பாலசுந்தரம், வி. சங்கரநாராயணன், பா. கோவிந்தராசன், M. R. பாண்டியன், P. V. முத்துசாமி S. P. T. திராவிடமணி, K. கோவிந்தசாமி, சே. தேவசகாயம், R. பாண்டியன், வே. தா. பெரியசாமி, R. அங்கமுத்து, எ. ஜெயராமன், S. கன்னியப்பன், M. தருமன், மூ. மதுரை, C. V. ராசன், பெருமாள், R. சுப்பராயலு, கி. பக்தவச்சலம், எ. எஸ். ராமன், கா. சொக்கலிங்கம், K. கண்ணபிரான், சொ. அ. அ. பால்ராஜி, A. சங்கரன், C. கணேசன், K. சுந்தரமூர்த்தி, N. V. நடராசன், ம. சு. முத்து.

* * *

நாங்கள், இந்தத்திருமணம்பொருந்தாத்திருமணம், இதனைச்செய்துகொள்வதன் மூலமும், இதன்மூலம்கட்சிக்காக, அவர் செய்ய எண்ணும் புதிய ஏற்பாடும், எங்களுக்கு அவரிடமுள்ள நம்பிக்கையை இழக்கும்படி செய்வதால், அவருடைய தலைமையிலே கழகம் இருக்கும் வரையில் அதிலிருந்து பணியாற்றவோ, அதன் பேராலும் வாலிப உள்ளங்களைத் தடவிக் கொடுக்கும் விதமாகவும், நேரடிநடவடிக்கை என்ற முறையில் இந்தி எதிர்ப்பு, மார்வாடிகடை மறியல், 144 மீறல் என்றெல்லாம் திட்டம் வகுத்தாலும், அவைகளில் பங்குகொள்ள முடியாது என்பதையும், கழகத்தோழர்களுக்கும், பொதுமக்களுக்கும் தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்தத் திருமணம் எங்களை இழிவுபடுத்துகிறது. எங்கள் கொள்கையைப் பழிக்கிறது. இயக்கத்துக்குத் துடைக்க முடியாத பழியைத் தருகிறது.

இது திருமணம் அல்ல, திருமணம் என்ற பேரால் ஒரு ஏற்பாடுதான் என்று பெரியார் சாக்குக் கூறுவது எங்கள் பகுத்தறிவைக் கேலி செய்வதாகவே நாங்கள் கருதுகிறோம்.

கட்சிக்காக அவர் செய்யப் போவதாக கூறும் ஏற்பாடு, ஜனநாயகத்துக்கும் எங்கள் தன்மானத்துக்கும் சாவு மணி அடிப்பதாகும் என்று எண்ணுகிறோம்.

எனவே, இந்த ஏற்பாடுகளை அவர் கைவிடாத முன்பு, அவருடைய தலைமையின் கீழுள்ள கழகத்திலே பணியாற்றுவதில்லை என்று தெரிவிக்கிறோம்.

இயக்கத் தோழர்கள் சிந்தித்து, தத்தமது, கருத்தைத் தெரிவிக்கக் கோருகிறோம்.

அவருடைய தலைமையை நீக்கும் முயற்சியில் ஈடுபடவோ, வேறுவகையான பணி புரியவோ முன் வருவதற்கு முன்பு, முதலில் பெரியாரின் இந்தஏற்பாட்டைக் கண்டிக்கும் அறிகுறியாக விலகி நிற்கிறோம் என்பதை முதலில் அறிவித்துவிடும்படி கேட்டுக்கொள்கிறோம்.

இதற்குச் சம்மதிப்பவர்கள் "திராவிட நாடு" இதழுக்கு எழுதியனுப்புங்கள்.

ஆயிரக் கணக்கானவர்கள் இந்த ஏற்பாட்டை ஏற்க மறுக்கிறார்கள் என்பதை அறிவியுங்கள்.

கொள்கைக்கு முரணாக நடந்தால் தலைவரையும் பின்பற்றமாட்டோம் என்று உலகுக்குத் தெரிவித்து உங்கள் தன்மானத்தைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்.

எதிரிகளின் ஏளனத்துக்குப் பதில் கூறும் முறையிலே, தெரிவித்து விடுங்கள். தலைவர் இந்தத்தகாத ஏற்பாட்டைக் கை விடாவிட்டால், நாங்கள் அவருடைய தலைமையை ஏற்க மாட்டோம் என்பதைத் தெரிவித்து விட்டோம் என்பதைக் காட்டுங்கள்.

எது செய்தாலும் ஜீரணமாகிவிடும் என்ற எண்ணத்தைப் போக்குங்கள்.

# இயக்கம் நமது உழைப்பு—தலைவர் சொத்தல்ல

உண்மைத் தன்மான இயக்கத்தவர் என்பதை உங்களுடைய கண்டனம் மூலம் உலகுக்குத் தெரிவியுங்கள்.

கண்டனத்துக்குப் பிறகும் தலைவர் பிடிவாதமாகவேயிருந்துவிட்டால் என்னசெய்வதென்று கவலைப் படாதீர்கள்.

ஒரு ஐந்து லட்ச ரூபாயும், சில வருஷ உழைப்பும், இடையே வந்த அம்மைக்குப் போய்ச் சேரும்.

அது பெரிய நஷ்டமல்ல—நமது மானம் நிலைக்கும்—இதை விட உருவான முறையிலே நம்மால் இயக்கத்தை நடத்திச் செல்ல முடியும்.

இயக்கம் நமது உழைப்பு—தலைவரின் சொத்து அல்ல—அவர் இயக்கம் என்று கருதி மணியம்மையிடம் தருவதாகச் சொல்லுவது இயக்கத்தின் கழிவுப்பொருளிலே ஒன்று.

இயக்கம், நமது வியர்வையிலும், கண்ணீரிலும், உழைப்பிலும் இருக்கிறது. அது எங்கும் போய் விடாது.

இந்த அக்ரமத்துக்கு நாம் பங்காளிகளல்ல என்பதை உலகுக்குக் காட்டிவிட்டுப், பறிபோனது போக, மிச்சமிருப்பதை வைத்துக்கொண்டு, உழைத்தது போக மிச்ச மீதியிருக்கும் வலிவைக் கொண்டு நாம் தன்மான இயக்கத்தைக் கட்டிக் காட்ட முடியும்.

திராவிடத் தோழர்களே, தடுமாற்றத்திற்கு இடமளிக்காதீர்கள்! தலைவருக்குத் தெரிவியுங்கள். உங்கள் ஏற்பாட்டை நாங்கள் ஏற்றுக்கொள்ளமாட்டோம், கண்டிக்கிறோம், கண்டன அறிகுறியாக, இதோ உம்முடன் சேர்ந்து பணியாற்றுவதை நிறுத்திவைக்கிறோம் — விலகி நிற்கிறோம் என்று தெரிவித்து விடுங்கள்.

நமது கண்ணீரும், கண்டனமும், விலகி நிற்கிறோம் என்ற உறுதியும் அவருடைய உள்ளத்தை மாற்றினால், இந்த அநீதியான ஏற்பாட்டை அவர் கைவிட்டால், நாம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டு அவருடைய மலரடிக்கீழ் நின்று மீண்டும் பணிபுரிவோம்.

இல்லையேல், அவர், மணியம்மை, ஐந்து லட்ச ரூபாய், இவ்வார்சு தான் ஒருபுறம்.

நாம், நமது தூய உள்ளம், உழைப்புத் திறம் இவை மற்றொருபுறம். இதிலே கடுகளவும் சந்தேகம் வேண்டாம்.

நமது வாழ்நாளிலேயே பெரியதோர் சோதனை இது. இதிலே நாம் காட்டும் தூய்மை, உறுதியைப் பொறுத்துத்தான் நாட்டின் எதிர்காலம் இருக்கிறது.

சிந்தியுங்கள்—சோர்ந்துவிட வேண்டாம்—தீர்மானியுங்கள்—அவசரம் வேண்டாம்— அஞ்சேல்—வெற்றி நமதே.

அன்புள்ள

**சி. என். அண்ணாதுரை.**

பெத்தாம்பாளையம் பழனிச்சாமி,
(கோவை மாவட்ட திராவிடர் கழகத் தலைவர்
மாகாண நிர்வாக உறுப்பினர்.)

ஈ. வெ. கி. சம்பத், (மாகாண நிர்வாக உறுப்பினர்.)

என். வி. நடராசன், (மாகாண நிர்வாக உறுப்பினர்,
ஆசிரியர், "திராவிடன்")

எ. வி. பி. ஆசைத்தம்பி, (மாகாண நிர்வாக உறுப்பினர், ஆசிரியர் தனிஅரசு.)

எஸ். ஆர். சுப்ரமண்யம், (மாகாண நிர்வாக உறுப்பினர்)

சி. தங்கராஜ், (சென்னை மாவட்ட தி. க. தலைவர்
மாகாண நிர்வாக உறுப்பினர்)

கே. கோவிந்தசாமி, (செயலாளர் சென்னை திராவிடர் கழகம், & மாகாண நிர்வாக உறுப்பினர்)

சி. டி. டி. அரசு, (மாகாண நிர்வாக உறுப்பினர்)

காஞ்சி மணிமொழியார், (பொருளாளர் சென்னை
தி. க- ஆசிரியர் "போர் வாள்")

கே. எம். கண்ணபிரான், (அமைப்பாளர் சென்னை
திராவிடர் கழகம்)

இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., (ஆசிரியர் "மன்றம்")

கே அன்பழகன், எம். ஏ., (ஆசிரியர் 'புது வாழ்வு')

டி. சண்முகம்,— (சென்னை மாகாண சுயமரியாதை
இயக்க நிர்வாகத் தலைவர்)

பூ. கணேசன், (பி. ஏ. ஆனர்ஸ், துணை ஆசிரியர்
'விடுதலை' சென்னை)

மா. இளஞ்செழியன், பி. எ., (ஆனர்ஸ்)
(துணை ஆசிரியர் "போர் வாள்")

எஸ். தவமணிராசன், (திராவிட மாணவ கழக
அமைப்பாளர்)

புலவர் செல்வராஜ், (தலைவர் சென்னை சு. ம. சங்கம்,
ஆசிரியர் "கதிரவன்")

டி. எம். பார்த்தசாரதி, (ஆசிரியர் 'தமிழ் நாடு'
வில்லிவாக்கம் தி. க. தலைவர்)

எம். எஸ். முத்து, (செயலாளர் சென்னை, சு. ம. சங்கம்)

சத்தியவாணிமுத்து: (சு. ம. இயக்கம் நிர்வாக
உறுப்பினர்.)

டாக்டர். கி. கணேசன்: (துணைத்தலைவர் பெத்துநாய்க்
கன்பேட்டைத் திராவிடர் கழகம்.)

வி. டி. பெரியசாமி: (துணைத்தலைவர் சென்னை,
சு. ம. சங்கம்)

வி. முனுசாமி: (சென்னை, நகராண்மைக்கழக
உறுப்பினர்.)

சி. வி. ராஜன், (இந்தி எதிர்ப்புப் போராட்ட
கண் காணிப்பாளர்.)

எ. சங்கரய்யா,
பி. ராமசாமி,
வி. கே. சுப்பராயலு,
(சென்னைத் திராவிடர் கழக நிர்வாக உறுப்பினர்கள்.)

கே. சிவஞானம், (சென்னை சுயமரியாதை சங்க
நிர்வாக உறுப்பினர்.)

வி. கண்ணன்,— (செயலாளர், சென்னை நகர
திராவிட மாணவர் கழகம்.)

## நான்கண்ட அழகர்சாமி

13-ம் பக்கத் தொடர்ச்சி

தலைமை தாங்கவேண்டுமென்றும், இல்லாவிட்டால், மாநாடே நடக்கக் கூடாதென்பதே தனது முடிவென்றும் கூறி, மறுநாள் சென்னைக்குப் புறப்பட்டார். அங்கு சில முக்கிய மானவர்களைக் கண்டு பேசினார். சிலருடைய சூழ்ச்சியால் பெரியாரே அப்படி ஒரு கடிதத்தை எழுதும்படி செய்யப்பட்டது என்பதைத் தெரிந்துகொண்டார்.

“காஸ்மாப் பாலிட்டன்” கிளப்பில் தங்கியிருந்த தோழர் சாமியப்பா அவர்களையும் கண்டு பேசினார். அதன் பின்னர், சில நண்பர்களைக் கொண்டு இராமச்சந்திரருக்குக் கடிதங்கள் எழுதும்படி செய்தார். இக்கடிதங்களை இராமச்சந்திரர் பார்த்ததும், உடனே பெரியாருக்கு ஒருகடிதம் எழுதி, அதில், தான் மாநாட்டுக்கு வருவதாகவும், ஆனால், மாநாட்டுக்குத் தலைமை தாங்க முடியாதென்றும் குறிப்பிட்டிருந்தார். அதன்பின்னர்தான், பெரியாரே மாநாட்டின் தலைவர் என்று முடிவு செய்யப்பட்டது. ஆனால், தோழர் சாமியப்பாவுக்கு இது தெரியாது. “சேர்ந்துவாழும் விரோதிகள்” சிலரின் சூழ்ச்சியெல்லாம், அழகர்சாமியின் ஆர்வத்தாலும், முன்யோசனையினாலும், முறியடிக்கப்பட்டன. ஆனால், இச்சூழ்ச்சிக்குக்காரணமாயிருந்த பெரியமனிதர்கள் எவரிடமும் அழகர்சாமி தனது விரோதத்தைக் காட்டிக் கொள்ளவில்லை. அவர்கள் பட்டம், பணம் ஆகியவற்றில்தான் பெரிய மனிதர்களே தவிர, அழகர்சாமியிடம் தங்கள் எண்ணங்களை வெளிப்படையரகக்கூறத் தைரியமற்றவர்கள்.

தோழர் இராமச்சந்திரரைத் தலைவராக ஆக்கும்படி சாமியப்பாவிடம் சென்னைத் தலைவர்கள் முதலில் சொன்னதைக் கண்டு, தோழர் சாமியப்பா எந்தவிதமான சந்தேகமும் தனக்கு இருப்பதாகக் காட்டிக் கொள்ளவில்லை. ஏனென்றால், எந்தத் தப்புஎண்ணத்தின்மீது இந்தப்படையெடுப்பு நடைபெறுகிறதென்பது தோழர் சாமியப்பாவுக்குத் தெரியாது. திருவாரூரில், சென்னைப் பெரிய மனிதர்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமான ஓர் கனவான் இருந்தார். (அவர் பெயர் இன்று நமக்குத் தேவை இல்லை) அவர் ஒரு சிறந்த நிபுணர். தான் நினைப்பதை எல்லாம் சாதிக்கும் ஆற்றல் கொண்டவர். இவர் திருவாரூரில், தோழர்கள் இராமானுஜம், சாமியப்பா ஆகியவர்களுக்கு நண்பர். இதைப் போலவே, இந்த இருவரின் எதிரியான வடபாதிமங்கலம் தியாகராஜன் அவர்களுக்கும் நண்பர். சாமியப்பா கட்சியும் தியாகராஜன் கட்சியும் தம்முடைய நம்பிக்கைக்குப் பாத்திரமாகயிருப்பதால், தாம் எண்ணியதைச் செய்து முடித்து விடலாமென்பதில் அந்த நிபுணர் சிறிதும் சந்தேகப்படவில்லை. அந்த நிபுணருக்கு நமது அழகர்சாமியைப் பற்றியும் நன்கு தெரியும். அதனால்தான் அந்த நெருக்கடியான கட்டத்தில் அந்த நிபுணர் தோற்கவும், அழகர்சாமி வெற்றி பெறவுமான நிலைமை உண்டாயிற்று.

பெரியாருக்கு விரோதமாக நடக்கும் ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்களைப் பற்றிப் பெரியாரிடம் சொல்லுவதற்கு அழகர்சாமி எண்ணவில்லை. ஏனென்றால், அதுவரையில் இந்தச் சதிகாரர்கள் பெரியாரிடம்மரியாதையுடனும், நட்புடனும் இருக்கும்போது, தான் போய்ச் சொல்லுவது, நம்பமுடியாத செய்கையாகும் என்பதுடன், இதனால் எதிரிகள் விழித்துக் கொள்வார்களென்பதும் அழகர்சாமியின் எண்ணம். இந்த முதல் போராட்டத்தில் சென்னைப் பெரிய மனிதர்களும் திருவாரூர் நிபுணரும் தோல்வியடைந்தார்கள். இதனால் அவர்களுக்கு ஆத்திரம் அதிகமாயிற்று. மாநாட்டில், தீர்மானங்கள் மீது விவாதத்தை உண்டாக்கி, அதனால் ஓர் குழப்பத்தை மகாநாட்டில் ஏற்படுத்திவிட வேண்டுமென்பது அவர்களுடையஎண்ணம்.

மகாநாட்டிற்குப் பெரியாரைத் தலைமை வகிக்க விடாமல், இராமச்சந்திரரைத் தலைமை வகிக்கும்படி செய்து, திராவிட நாட்டுப் பிரிவினைத் தீர்மானத்தின்போது, அதை எதிர்த்துப் பேசித் தோற்கடிக்கச் செய்து, மகாநாட்டைத் தங்களுடையதாகச் செய்ய வேண்டுமென்பது சென்னைத் தலைவர்களின் யோசனை. ஆனால் இதற்குப் போட்ட முதல்திட்டம் படுதோல்வியானதும், மீண்டும் சென்னையில் புனராலோசனை செய்தார்கள். தங்களுக்கு இருந்த பலம் இன்னும் இருக்கிறதென்று சென்னைத் தலைவர்களின் படைத் தலைவர்கள் சொன்னார்கள். பெரியாருடையபலத்தைக்குறைக்கப் பெரியாரின் ஆட்களிலேயே சிலரைப் பிடித்து, மோதும்படி விடவேண்டுமென்பதும், இப்படிச் செய்வது தங்கள் எண்ணத்திற்குச் சாதகமாக இருக்குமென்பதும் அந்தப் படைத் தலைவர்களின் எண்ணமாகும். திருவாரூர் நிபுணர் இதற்கு ஓர் திட்டம் வகுத்தார். அதாவது ஒருதோழரை என்னிடம் அனுப்பிவைத்தார். அந்தத் தோழர், தாம் தியாகராஜன் அவர்களிடமிருந்து வருவதாகவும், என்னை வடபாதி மங்கலத்தார் பார்க்க விரும்புவதாகவும் சொன்னார். எனக்குக்கொஞ்சம் பயம்தான். ஏனென்றால், வடபாதி மங்கலத்தாருக்கு என்மீது கோபமிருந்தது. அது பழைய சண்டை. முத்தையா அவர்களின் தேர்தலில் எனக்கும் வடபாதி மங்கலத்திற்கும் உண்டான சண்டைஅது. அந்தப் பழைய கோபத்தைத் தீர்க்க எண்ணுகிறாரோ என்று முதலில் நினைத்தேன். என்னிடம் வந்த நண்பர், அழகர்சாமிதான் என்னைத் தங்களிடம் அனுப்பிவைத்தார் என்றார். பின்பு நான் விஷயம் என்னவென்பதைப் புரிந்துகொண்டு, வந்த விபரம் என்னவென்று விசாரித்தேன். அந்த நண்பர் எல்லாவற்றையும் சொன்னார். பின்னர் எழும்பூர் ரயில் வேஸ்டேஷனிலுள்ள ரெஸ்டாரண்ட்டில் தங்கியிருந்த பெரிய மனிதரிடம் என்னை அழைத்துச் சென்றார். நான் அவரிடம், அவர்களுடைய கட்சியின் நோக்கத்தைக் கேட்டுத் தெரிந்துகொண்டு, பின்பு இன்னின்னவை செய்ய வேண்டுமென்றும் சொன்னேன். உடனே அந்தப் பெரியமனிதர் தம்முடைய பெட்டியைத்திறந்து 1000 ரூபாய்களை எடுத்து என்னிடம் கொடுத்து, வேண்டியதைச் செய்யும்படியும், மீதி 1000 ரூபாயையும், மறுநாள் கொடுப்பதாகவும் சொன்னார். நான் அக்கனவானை நோக்கி “உங்களுக்கு நம்பிக்கையான ஓர் ஆளை என்னுடன் அனுப்புங்கள்” என்றும் கேட்டேன். அவர் ஓர் ஐயரை என்னுடன் அனுப்பிவைத்தார்.

(தொடரும்)

## என். வி. என். அறிக்கை

—*—

திராவிடர் இயக்கத் தலைவர் பெரியார் அவர்கள், தமது சொந்த விஷயமாயும், இயக்க விஷயமாயும், ஓர் ஏற்பாட்டைச் செய்யப்போவதாகச், சில காலமாகச் சொல்லிவந்துள்ளது, இயக்கத் தோழர்கள் அறிந்ததேயாகும். அதிலும் குறிப்பாகக் கோவை மாநாட்டிலே இதைப்பற்றி வலியுறுத்திக் கூறினார்.

ஆனால் அந்த ஏற்பாடு என்ன என்பதை 18-6-49-ல் நான் முக்கிய நண்பர் மூலம் கேள்வியுற்றுத் திடுக்கிட்டேன். அதேபோன்று கேள்வியுற்ற ஒவ்வொரு தோழரும் திடுக்கிட்டு வருந்தினர். அன்றிரவே நான் பெரியார் அவர்களுக்கு இதைப்பற்றித் தனித்துக் கடிதம் எழுதினேன். அடுத்துத் தோழர்கள் கே. கே. நீலமேகம், எஸ். குருசாமி, வேலூர் திருநாவுக்கரசு, கடலூர் குருசாமி ஆகியோருடன் நானும்ஏற்காட்டுக்குச்சென்று, பெரியார் அவர்களிடம்,அவரதுஏற்பாட்டினால், ஏற்படும் தீமைகளைஎடுத்துக் கூறினோம். அவ்வளவையும் கேட்டு மீண்டும் யோசித்து ஆவன செய்வதாகக் கூறினார். நாங்கள் அதில் நம்பிக்கை கொண்டு திரும்பினோம்.

இந்நிலையில் 28–6–49 "விடுதலை"யில் பெரியார் அவர்கள் தமது திருமண விஷயமாயும், கட்சி வார்சு விஷயமாகவும் வெளியிட்டுள்ள அறிக்கையானது, இயக்கமும் கொள்கையும் தன்னோடு அறவே அழிந்துபடட்டும் என்பதையே விளக்கிக் காட்டியுள்ளது. அவ்வறிக்கையைக் காணும் திராவிட இயக்கத் தோழர்களும், தாய்மார்களுமல்லாது, இயக்க ஆதரவாளர்களும் வெட்கித் தலை குனிய வேண்டியதாயிருக்கிறது.

முதலாவதாகப் பெரியார் அவர்கள் தோழியர் கே. எ. மணியைத் திருமணம் செய்துகொள்வதென்பது, இயக்கக் கொள்கைக்கு அறவே மாறுபட்டதானதோடு, அவர் அதற்காகக் கூறப்படும் காரணங்கள் அனைவரையும் ஏமாற்றப் பார்ப்பதாகவே இருக்கிறது. இயக்கம் இன்று அடைந்துள்ள வளர்ச்சியின் நிலையில் இத்திருமண ஏற்பாடானது மனிதத் தன்மையைப் பழிப்பதாக இருக்கிறது என்பதை நான் மேலும் விளக்கத் தேவையில்லை என்று கருதுகிறேன்.

இரண்டாவதாக, பெரியாருக்குப் பின் இயக்கத்துக்கு வார்சு ஆக இருக்க எவருக்கும் அருகதையோ, யோக்கியதையோ இல்லையாம், எனவே அவரது உடல் நலன் விஷயத்தில் அக்கறை கொண்டு பணியாற்றிவரும் தோழியர் கே. எ. மணி ஒருவரே வார்சுக்கு லாயக்குடையவர் என்றும் குறிப்பிட்டிருக்கிறார். இக்கூற்று மிகமிக நன்றிகெட்டதான தென்பதோடல்லாமல் ஜனநாயகத் தன்மைக்கு மீறியதாகவுமிருக்கிறது.

சாதாரணமாக ஒரு கடையில் பணியாற்றும் குமாஸ்தா கூடத் தனது முதலாளி சிறிது நன்றிகெட்டதனமாய் மனிதத் தன்மையை மறந்து பேசினால் மனம் பொறுக்கமுடியாமல்,கடையிலிருந்து வெளியேறுவான் என்றால், திராவிடரின் உயிர் நாடியான முக்கிய பிரச்னைகளுக்காக உண்மைத் தொண்டாற்றித் தங்களது வாழ்வையே பாழாக்கிக்கொண்டுள்ள இயக்கத் தேர்ழர்களுக்குப் பெரியாரின் அறிக்கை எவ்வளவு வேதனையை யளிக்கும் என்பதை நான் கூறவேண்டியதில்லை.

இயக்கத்தில் எவர் மீதும் நல்லெண்ணமோ, நம்பிக்கையோ இல்லாத ஒரு தலைவரின் தலைமையின் கீழ் அதுவும் வெளிப்படையாக அறிக்கை வெளியிட்ட பின்னர் மேலும் தொண்டாற்றுவதைப் போன்ற இழிதன்மை வேறு ஒன்றும் இருக்கமுடியாது.

அதுமட்டுமல்லாமல் தமது திருமண விஷயமாய், கட்சி ஏற்பாடு விஷயமாய் இயக்கத்தில் ஒருவரையும் கலக்காமல், நிர்வாகத் தலைவரான தோழர் டி. பி. வேதாசலம் அவர்களுக்கும் தெரிவிக்காமல், சொந்த விஷயம் என்றபேரால் கவர்னர் ஜெனரலிடம் பேசியிருப்பதானது இயக்கத்துக்கும், கொள்கைக்கும் அதற்காக உழைக்கும் இயக்கத் தோழர்களுக்கும் செய்த பெரும் துரோகமாகும்.

தவறு செய்துள்ள தலைவர் திருந்திக்கொள்ள வழிவகை தேடுவதை விடுத்து இயக்கத்தில் ஈடுபட்டுழைக்கும் அனைவரையும் நாணயக்குறைவாய் ஜனநாயக விதிக்கு மாறாய்த் தமது அறிக்கையில் குறிப்பிட்டிருப்பதானது, இனி அவரது தலைமையில், கட்சியில் பணியாற்ற முடியாததாகிவிட்டது.

என்னைப் பொறுத்தவரை நான் எனது பொதுவாழ்வில் கொள்கையையே பிரதானமாகக் கொண்டு பணியாற்றி வந்துள்ளேன். இது காரணம் பற்றியே 1938-ல் நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின்போது சென்னை ஜில்லா காங்கிரஸ் கமிட்டியிலிருந்தும் பெத்துநாய்க்கன்பேட்டை காங்கிரஸ் செயலாளர் பதவியையும் ராஜிநாமாச் செய்தேன். அன்றும் சரி, இன்றைக்குங்கூடப்பொதுவாழ்வில் சொந்த லாபத்தைக் கருதி உழைத்ததாகப் பெரியார் அவர்களே கூற முடியாது. அதேபோன்று என்னைவிட இன்னும் பல தொல்லைகளுக்காளாகி உழைத்து வரும் இயக்கத் தோழர்கள் பெரியாரின் அறிக்கையைக் கண்டு மனம் நொந்து குமுற வேண்டியிருக்கிறது.

எனவே, பெரியார் தமது ஏற்பாடுகளை வாபஸ் பெற்றாலன்றி நான் இயக்கத்தில் கலந்து பணியாற்றுவதென்பது சூத்திரப்பட்டத்தைவிட கேவலமானதாகுமென்று எண்ணுகிறேன்.

ஆக, இந்நிலையில் என்னைப்போன்றார் இயக்கத்திலிருந்து விலகி நிற்பதைத் தவிர வேறு வழியில்லை. அதற்கேற்பவே நான் இயக்கத்திலிருந்து விலகி நிற்கிறேன் என்பதை இயக்கத் தோழர்களுக்கும் பிரமுகர்களுக்கும் தெரிவித்துக்கொள்வதுடன், எக்காரணங்கொண்டாவது பெரியார் தமது ஏற்பாட்டை ரத்து செய்துவிடுவாரேயானால் மீண்டும் எப்போதும் போலப் பணியாற்றுவேன் என்பதையும் இதன் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

உண்மைத் தொண்டுக்கு இன்றில்லாவிடினும், இறுதியில் வெற்றி உண்டு என்பதை இயக்கத் தோழர்கள் மனதில் வைத்து ஆவன செய்ய வேண்டுகிறேன்.

அன்புள்ள

**என். வி. நடராசன்**

# திராவிட நாடு

ஞாயிறு] 3—7—49 [காஞ்சி

## எட்டாம் ஆண்டு

"திராவிடநாடு" ஏழு ஆண்டுகளைத் தாண்டி வந்து, இன்றுமுதல் எட்டாவது ஆண்டினைத் தழுவுகிறது. தழுவுவதிலே ஒருவிதமகிழ்ச்சியை அது கொள்ளுகிறது. அம்மகிழ்ச்சியை அன்பர்களுக்கும், ஆதரவாளர்களுக்கும் காணிக்கையாக வைக்கக் கடமைப்பட்டுள்ளது.

எட்டாம் ஆண்டு! ஆடிப்பாடித் துள்ளி விளையாடும் இளமைப்பருவம்! களங்கமற்ற உள்ளமும், உறுதியினைத்தழுவும் உரமும் கொண்டு எழில் பெற்று விளங்கும் காலம்! கள்ளங்கவடமற்று விளையாடும் இளைஞனைக், காணும் கவட செஞ்சங்கொண்ட வயதுவந்த நொண்டி, தான் விளையாட முடியாமலிருக்கும்போது அவ்விளைஞன் மட்டும் விளையாடுவதா என்று பொறாமையுள்ளங்கொண்டு, கல்லெடுத்தெறிந்து இளைஞனின் காலில் படுகாயமுண்டாக்க நினைப்பது என்பது, சாதாரணமாக நடைமுறைப் பழக்கத்தில் சில இழிகுணம் படைத்தோரிடத்து இருக்கக் காண்கிறோம். அதுபோல "திராவிடநாட்"டின் வளர்ச்சிகண்டு பொறாமை கொண்ட காங்கிரஸ் அரசாங்கம் அடக்குமுறை ஜாமீன் குண்டை எறிந்து, "திராவிடநாட்"டிற்குப் படுகாயமுண்டுபண்ண எண்ணி முயன்று வருகிறது. அடிபடும் இளைஞன் காயத்தைத் தேற்றிக்கொண்டு நடமாடுவதுபோல், "திராவிடநாடும்" தன்மேல் உதிர்க்கப்படும் அடக்குமுறைக்குண்டுகளை உதறித்தள்ளிக் கொண்டு தன் இலட்சியப் பாதையில் சளைக்காமல் செல்லவே விரும்புகிறது.

"திராவிடநாடு" சென்ற ஏழாண்டுக்காலமாக மலர்மெத்தை விரிக்கப்பட்ட நடைபாதையில் நடந்து வரவில்லை. கல்லும் முள்ளும், கடும் புதரும், கொடும் விலங்கும் அதன் வழிநடைப் பாதையிலே குறிக்கிட்டுத்தான் வந்திருக்கின்றன. இன்வாழ்வுப் புரியினைச் சென்று சேர்வதையே நோக்கமாகக் கொண்டதால், எதிர்ப்படும் இன்னல்களை யெல்லாம் துச்சமாக நினைத்து முன்னேறி வருகின்றது. துவக்கப்பட்ட பயணத்தின் இடையில், அன்பர்கள் ஆதரவு என்னும் குளிர் மலர் ஓடைகள் தென்பட்டுக்கொண்டே இருப்பதால், எதிர்த்துத் தாக்கிடும் இன்னல்களை மறந்து களிப்புடன் இளைப்பாற இடமேற்படுகிறது.

"திராவிட நாடு" தன்னைப் பின்தொடர்பவர்கள் எளிதில் வந்து சேர, நடந்து செல்லும் வழியைச் செப்பனிட்டுக் கொண்டே வந்திருக்கிறது; இனியும் செப்பனிட்டுக் கொண்டே செல்லும். வழியில் காணப்படும் சனாதனச் சருக்கல்களைப் போக்கியும், வருணாச்சிரம வளைவுகளை நிமிர்த்தியும், மூடப் பழக்க வழக்கம் என்னும் முட்புதர்களை அழித்தும், குருட்டு நம்பிக்கை என்னும் கொடுங்கள்ளிகளை வெட்டியும், பழமைப் படுகுழிகளைத் தூர்த்தும், அவற்றிலே நெளியும் புராணப் பாம்புகளையும், இதிகாசக் கொடுந்தேள்களையும் கொன்றும், வஞ்சக நரிகளை விரட்டியும், சீறிடும் செந்நாய்களை விரட்டியும், ஊளையிடும் ஓநாய்களை அலட்சியப்படுத்தி அப்புறப்படுத்தியும் தொண்டு செய்து வருகிறது. சமுதாயத்திலே பல கோணல் வளையங்கள் இருந்தால்தான், அவற்றின்மீது தாவித் தாவி தம் இன்பவாழ்வை நடத்த முடியும் என்று கருதி, இன்றைய சமுதாயத்தில் உலவி வரும் கோணல் சேட்டைக்காரர்களுக்கு "திராவிட நாடு" சென்ற ஏழு ஆண்டுகாலமாக ஒரு வைரியாகவே காணப்பட்டு வருகிறது. "திராவிட நாடு" வைரியாக இருக்க விரும்பவில்லை; ஆனால் "திராவிட நாட்"டை அவர்கள் வைரியாக எண்ணுகிறார்கள்.

தான்கொண்ட இலட்சியம் ஈடேற "திராவிடநாடு" அன்றுபோல் இன்றும் பாடுபடுகிறது; இன்றுபோல் என்றும் பாடுபடும். வியாபார விளம்பரச் சலுகைகள் பெறாமல் — எதிர்பார்க்காமல்தான் கடமையை நிறைவேற்றி வருகிறது. இது சீமான்களின் புன்முறுவலை எதிர்பார்த்து ஏங்கி நிற்காமல், தொழிலாளர்களின் துயரைத்துடைப்பது, பாட்டாளியின் பரிதாபத்தைப்போக்குவது, அல்லலுற்றவர்களுக்கு ஆறுதல் கூறுவது, ஏழைகளுக்கு இதஞ்சொல்லுவது, அறியாதாருக்கு அறிவுறுத்துவது, உணராதார்க்கு உணர்த்துவது, கொடுமைப் புரிவோரைக் கண்டிப்பது, குற்றஞ் செய்வோரை இடித்துரைப்பது, குறையுடையோரைச் சுட்டிக்காட்டுவது, நல்லதாற்றியோரின் நலம் பாராட்டுவதுபோன்ற அரிய தொண்டினையே முக்கிய குறிக்கோளாகக் கொண்டு இதுகாறும் பாடுபட்டு வருகிறது; இனியும் பாடுபட்டு வரும்.

ஏஜண்டுத் தோழர்கள் பெரும்பாலும் இயக்கத் தொண்டர்கள்தான். அவர்களெல்லோரும் நமது பாராட்டுதலுக்கு உரியவர்கள்தான் என்றாலும், அவர்களில் சிலர் நடந்து கொள்ளும் முறைதவறிய போக்கின் காரணமாக, அவர்களிடத்திலேயே விட்டுவைக்கும்படியான அவசியத்தில் அகப்பட்டுக்கொண்ட தொகையின் அளவு சில ஆயிரங்களைக் கடந்து நிற்கிறது. சந்தா அன்பர்கள் கொடுக்கவேண்டிய தொகையும் ஆயிரக்கணக்கை எட்டியிருக்கிறது. இத்தகைய சூழ்நிலைகளுக்கிடையேதான் வேறு வருமான வழிகள் எதையும் நிலையாகக் கொள்ளாத "திராவிட நாடு" வளர்ந்தும் — வளர்ந்து வரவேண்டிய அவசியத்திலும் இருந்துவருகிறது. ஏஜண்டுத் தோழர்கள் ஒரு பத்திரிகைக்குக் கடைக்கால் போன்றவர்கள். அவர்கள் வளமாக நின்றால்தான் பத்திரிகை உறுதியுடன் நிற்க வழியேற்படும். ஏஜண்டுகள் தம் கடமையை இனிது செய்துமுடிக்கப் பொதுமக்கள் ஏற்றபடி ஆதரவினைத் தர வேண்டுகிறோம்.

"திராவிட நாடு" எட்டாம் ஆண்டை எட்டிப் பிடித்திருக்கும் இந்நாளில், எம் மனமார்ந்த மகிழ்ச்சியையும், நன்றியையும் ஏஜண்டுத் தோழர்களுக்கும், சந்தா அன்பர்களுக்கும், கட்டுரை வழங்கினோர்க்கும், கவிதைகள் வரைந்தோர்க்கும், கதைகள் தீட்டினோர்க்கும், நன்கொடை கொடுத்தோர்க்கும் தெரிவித்துக்கொள்ளும் முறையில் இவ்விதழை அன்பின் காணிக்கையாக வைக்கிறோம். அன்பர்களின் வற்றா ஆதரவை என்றென்றும் விரும்பி நிற்கிறது "திராவிட நாடு".

✲

# ★ நான் கண்ட அழகர்சாமி ★

தொடர்ச்சி—10

எஸ். வி. லிங்கம்

ஜஸ்டிஸ் கட்சி மாநாட்டைத் திருவாரூரில் நடத்துவதென்று முடிவு செய்யப்பட்டதும், அழகர்சாமி மாநாட்டுக்கு வேண்டிய காரியங்களைக் கவனித்து வந்தார். தோழர்கள் சாமியப்பா அவர்கள் இராமாநுஜம் அவர்கள் ஆகிய இருவரும் மாநாட்டை நடத்தும் பொறுப்பைப் பெரியாரிடமிருந்து ஏற்றுக்கொண்டார்கள். மாநாட்டில், திராவிட நாட்டுப் பிரிவினையை ஒப்புக்கொள்ளும்படி செய்யவேண்டுமென்பது பெரியாருடைய எண்ணமாகும். மாநாட்டை நடத்தும் பொறுப்பை ஏற்றுக்கொண்ட இருவரும், பெரியாருடைய நம்பிக்கைக்குப் பாத்திரமாக இருந்ததைப் போலவே, பெரியார் செல்லும் வழி தங்களுக்குப் பிடிக்கவில்லை, எனவே, அதனைத் திருத்தவேண்டுமென்ற எண்ணங்கொண்ட, பெரியாருடன் 'சேர்ந்து வாழும்' விரோதிகளின் நம்பிக்கைக்கும் பாத்திரமானவர்களாக இருந்தார்கள். இந்தத் தர்ம சங்கடமான நிலையை அழகர்சாமி மாநாட்டின் ஆரம்ப காலத்தில் எதிர்பார்க்கவில்லை.

மாநாட்டின் வரவேற்புக் கமிட்டிக் கூட்டம் இரண்டு மூன்று முறை கூடிக், கடைசியாக நான்காவது கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில்தான் வரவேற்புத் தலைவர், மாநாட்டுத் தலைவர் தேர்ந்தெடுப்பதும், மாநாட்டுத் தேதி, குறிப்பிடுவதும் முடிவாக வேண்டியிருந்தன. இந்த நான்காவது கூட்டம் நடைபெறுவதற்கு முதல்நாள், பெரியாருக்கு வரவேற்புக் குழுவினர் பற்றி ஏதோ ஓர் சந்தேகம் உண்டாகி இருக்கவேண்டுமோ என்னவோ தெரியவில்லை, ஈரோட்டிலிருந்து ஒரு தந்தி தோழர் இராமானுஜம் அவர்கள் மேல்பார்த்து எனக்குக் கொடுப்பது என்று பெரியார் அனுப்பி இருந்தார். இந்தத் தந்தி என்னிடமோ அல்லது அழகர்சாமியிடமோ கொடுக்கப்படவில்லை. அந்தத் தந்தியில், என்னை ஈரோட்டுக்கு வரும்படி அறிவிக்கப்பட்டிருந்தது என்பது பின்னர்தான் தெரிந்தது.

நான்காவது வரவேற்புக் கழகக் கூட்டம் தோழர் இராமானுஜம் அவர்கள் வீட்டில் நடைபெற்றது. ஜில்லாத் தலைவர்கள் நூறுபேருக்கு மேல் வந்திருந்தார்கள். கூட்டத்திற்குத் தோழர் சாமியப்பா அவர்கள் தலைமை வகித்தார். மாநாட்டைச் சிறப்பாக நடத்துவதற்கும், அதற்கு வேண்டிய பண வசூலுக்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன. மாநாடு நடத்தவேண்டிய இடத்தையும், மாநாட்டுக்கு வருபவர்களுக்குச் சமயல் செய்வதற்கு விருதுநகரில் இருந்து ஆட்கள் வரவேண்டுமென்பது பற்றியும் அழகர்சாமி கூறினார். அது ஒப்புக்கொள்ளப்பட்டது. அதன் பின்னர், மாநாட்டின் வரவேற்புக் கமிட்டிக்கு உபதலைவர்களாக எழெட்டுக் கனவான்களின் பெயர்களை அழகர்சாமி சொன்னார். அவர் குறிப்பிட்ட பெயர்களைத் தோழர் சாமியப்பா அவர்களும் மற்றவர்களும் ஒப்புக்கொண்டார்கள். கடைசியாக பி. இராமசந்திரரின் பெயரை அழகர்சாமி குறிப்பிட்டார். தோழர் சாமியப்பா அவர்கள் அந்தப் பெயரை வரவேற்புக் கமிட்டியில்சேர்க்கவேண்டாமென்று சொன்னார். மீண்டும் அழகர்சாமி அவருடைய பெயரும் அதில் இடம் பெறவேண்டுமென்ற அவசியத்தை விளக்கிக் கூறி வற்புறுத்தினார். தோழர் சாமியப்பா அழகர்சாமியைத் தனியாக அழைத்து இராமசந்திரரின் பெயரை மாநாட்டுத் தலைவர் பெயராகப் போடவேண்டுமென்றும், அதனால்தான் உபதலைவர்கள் பட்டியில் அவருடைய பெயரைச் சேர்க்கவேண்டாமென்று சொன்னதாகவும் கூறினார். இது அழகர்சாமியைத் திடுக்கிடும்படி செய்தது. ஆத்திரம், கோபம் எல்லாவற்றையும் அடக்கிக்கொண்டு, மாநாட்டுத் தலைவராகப் பெரியாரின் பெயரைத்தான் போடவேண்டுமென்றும், இராமசந்திரரின் பெயரைப் போட்டால் வீண் விபரீதங்கள் ஏற்படுமென்றும் சொன்னார். மீண்டும் தோழர் சாமியப்பா அழகர்சாமியை நோக்கி, "இராமச்சந்திரரையே மாநாட்டுத் தலைவராக ஆக்கவேண்டுமென்று பெரியாரே எழுதியிருக்கும்போது, நீ, பெரியாரே தலைவராக இருக்கவேண்டுமென்று கூறுவதில் என்ன பொருள் இருக்கிறது" என்று கேட்டார். அதன் பின்னர் வரவேற்புக் கமிட்டிக் கூட்டம் முடிந்தது; இராமச்சந்திரரே மாநாட்டுத் தலைவர் என்பதாக அறிவிக்கப்பட்டது.

மறுநாள் தோழர் அழகர்சாமி திருவாரூரிலுள்ள தன் நண்பர்களுடன் இது சம்பந்தமாகக் கலந்துபேசினார். மாநாட்டின் வரவேற்புக்கமிட்டியில் சென்னையிலுள்ள சிலருடைய சூழ்ச்சி இடம் பெற்று வேலை செய்கிறதென்றும், ஒரு வாரத்துக்கு முன்பு, தான் பெரியாரைச் சந்தித்து இது சம்பந்தமாகப் பேசி முடிவு செய்ததாகவும், அந்த முடிவுக்கு மாறாக இப்போது பெரியார் எப்படிக்கடிதம் எழுதியிருக்கமுடியும்என்றும் யோசித்தார். அதன் பின்னர், எது எப்படியானாலும், இனிப் பெரியாரையோ, தோழர் சாமியப்பா அவர்களையோ இது சம்பந்தமாகத் தான் எதும் கேட்கப்போவதில்லை என்றும், மாநாட்டுக்குப் பெரியாரே

(10 -ம் பக்கம் பார்க்க)

## இலடாக்

2-ம் பக்கத் தொடர்ச்சி

மார்க்கார், ஐபெக்ஸ் முதலிய வரையாடுகளும், செங்கரடி, பனிப்புலி, காட்டுக்கிடா, திபேத்திய மான், மரை, கலை முதலியவைகளும் அங்குள்ள காடுகளிலும், புதர்களிலும் பெருவாரியாக உள்ளன.

கனிப்பொருள் வளமும் இலடாக்கில் ஏராளமாகப் புதையுண்டு கிடக்கிறது. தங்கம், செம்பு, மணி வகைகள் முதலியவை அங்கே காணப்படுகின்றன. இலடாக், தான் கொண்டிருக்கும் வளப்பத்தின் மூலம் பல துறைகளிலும் வளர்ச்சியடைய வாய்ப்புக்கள் இருப்பினும், இதுவரையில் வளர்ச்சியடைவதற்கான வழியை அதனால் கண்டு கொள்ள முடியவில்லை. இனிமேல் வளர்ச்சிப்பாதையில் முனைந்து செல்ல முற்பட்டால் தான் பயனுண்டு.

பூகோள அமைப்பில் இலடாக் பகுதியானது பல இடங்களுக்கும் மைய பாகமாக இருந்துவருகிறது. பண்டுதொட்டு, ஆசியாவின் வெவ்வேறிடங்களிலிருந்து சென்று வந்து கொண்டிருக்கும் வாணிபக் கூட்டங்களின் வழிப்போக்கில் இது முக்கிய நடுவிடமாக அமைந்து வரலாற்றுச் சிறப்புடன் வாழ்ந்து வருகிறது. திபேத்திலிருந்து மேற்கு ஆசியாவிற்கும், மத்திய ஆசியாவிலிருந்து இந்தியாவுக்கும் வருவதற்கான முக்கிய பாதைகள் இலடாக் வழியாகத்தான் செல்லுகின்றன. 11,000 அடி உயரத்தில் அமைந்திருக்கும் இதன் தலைநகரான லே காரக்கோரம் கணவாய் வழியாக கிழக்குத் துருக்கிஸ்தானிக்கும், கிழக்கில் திபேத்துக்கும் சீனுவுக்கும் செல்லும் வழிகளின் இடையில் நடுவிடத்தில் இருக்கிறது. லே நகரிலுள்ள சத்திரஞ் சாவடிகளில், அன்றுபோல் இன்றும், பல நாட்டு வணிகர்களும் கூடித் தங்கள் பண்டங்களை பரிமாறிப் பண்டம்மாற்றுச் செய்துகொள்கின்றனர். சிங்கியாங் பகுதியிலிருந்து யார்க்கண்டியரும், கூலூ காஷ்மீர் ஆகிய இடங்களிலிருந்து இந்தியரும், பூரிகிலிருந்து முகம்மதியரும் வாணிபத்தை முன்னிட்டு இங்கே சந்திக்கின்றனர். போக்குவரத்துச்சாதனங்களும், வாழ்க்கை வசதிகளும் நன்கு அமைந்திராத ஆதிநாட்களில், இந்தியத் துணைக்கண்டத்தின் கலையும், கலாச்சாரமும் எப்படி இந்த வழிகள் மூலமாக வாணிகத்தைத் தொற்றிக்கொண்டு, மத்திய ஆசியாவுக்கும், தொலைவிலுள்ள சீனுவுக்கும் சென்றிருக்கின்றது என்பதை ஒருவாறு ஊகித்துத் தெரிந்து கொள்ளலாம். இலடாக் மூலமாகத் தான்பிற்காலப் பௌத்தமும், அதன் கலைமரபும் காஷ்மீரத்திலிருந்து திபேத்துக்குச் சென்று, பலதரப்பட்ட, ஆனால் ஒருமைப் பாங்குடைய பல்வேறு கலாச்சாரப் பிரிவுகள் இணைந்து ஒன்றுபடுவதற்கு வழி செய்தன. மத்திய ஆசியாவில் கோட்டான், லாப்நார் ஆகிய இடங்களில் கண்டெடுக்கப் பட்டுள்ள பாறைச் செதுக்குச் சிற்பங்கள் இதை நிலைநாட்டும்.

பூகோள முறையில் மட்டுமன்றி, பாதுகாப்புப்படை, அரசியல் ஆகிய முறைகளிலும் இலடாக் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக விளங்குகிறது. அங்கு ஆணும், பெண்ணும் பாகுபாடின்றிச் சேர்ந்தே வாணிகம் செய்கிறார்கள். ஆண்கள் பெரிய வாணிகத்தை மேற்கொண்டு நெடுந்தொலைவு சென்று வருகின்றனர். இலடாக்கில் உப்பு ஏராளமாகக் கிடைக்கிறது. அங்குள்ள உப்புநீர் ஏரிகள்தான் இதற்கு ஆதாரம். கம்பளிதான் இலடாக்கின் முதன்மையான விற்பனைப் பொருள். இலடாக் கம்பௌரி உலகெங்கும் கிடைக்கும் மிருதுவான கம்பளி வகைகளில் ஒன்றாகும். செம்மறியாடு வெள்ளாடுகளின் மிருதுவான மயிரிலிருந்து இது தயாராகிறது. மிகப் புகழ் பெற்ற காஷ்மீர் சால்வைகள் இதைக் கொண்டுதான் தயாராகின்றன.

இலடாக் உப்பையும், கம்பளி, வெங்காரம், சாறெடுத்த பழங்கள் முதலியவற்றையும் ஏற்றுமதிசெய்துவிட்டு, தேயிலை, புகையிலை, தானியங்கள், சர்க்கரை, தீப்பெட்டி, மட்டக்குதிரை, முதலியவைகளை, ஸ்கார்டு, கார்கில், யார்க்கண்ட், இந்தியா, காஷமீர் முதலிய இடஙகளிலிருந்து இறக்குமதி செய்துகொள்கிறது. மேலும் இலடாக்கியர் வாழ்க்கையில் மதச் சார்பு அதிகமாயிருப்பதால், வழிபாட்டு உருவங்கள், சாதனங்கள் முதலியவையும் ஏராளமாக அங்கே விற்பனையாகின்றன.

இலடாக்கியர் நெடுங்காலமாக அமைதியான மகிழ்ச்சியோடு கூடிய வாழ்க்கையை நடத்திவந்தவர்களாவார்கள். அண்மையில் இலடாக்கின் சுற்றுவட்டங்களில் நிகழ்ந்த சில முக்கிய நிகழ்ச்சிகளால் அவர்களது வாழ்க்கையில் ஒருவித கலக்கமும், திகைப்பும் ஏற்பட்டுள்ளன. காஷ்மீரைப் பாகிஸ்தான் படையெடுத்தது அவர்களுக்கு முதன் முதலாகப் பேரதிர்ச்சியை உண்டு பண்ணியது. இலடாக்கியர் தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காகத் தேசியப் படையொன்றைத் திரட்டியுள்ளார்கள். அங்குள்ளவர்கள் பெரும்பாலும் பௌத்தர்களாதலால், அவர்களாலேயேதான் தேசியப் படை திரட்டி உருவாக்கப்பட்டது என்று சொல்லலாம்.

இத்தகைய பல்வேறு சிறப்புக்களைக் கொண்ட இலடாக் தன்னுடைய சுதந்திர உணர்ச்சியை எவ்விதத்திலும் பாதுகாத்துக்கொண்டு நல்வாழ்வு நடத்த இற்றைப் பொழுது பாடுபட்டு வருகிறது. அதற்கு இந்திய அரசாங்கம் தன்னாலான ஆதரவு கொடுக்கத் தயாராக இருக்கிறது. அது போற்றுவதற்குரியதொரு பண்புதான். அதுபோலத் திராவிடமும் தன் சுதந்திர உணர்ச்சியைக் காப்பாற்றிக் கொண்டு தனியாட்சிநடத்த விரும்பினால், இந்திய அரசாங்கம் தன் ஆதரவைக் கொடுக்க முன்வருமா? கொடுக்க முன்வரும் வகையில், இலடாக், இந்திய அரசாங்கத்திற்குத் தன்னிலை காட்டி அறிவுறுத்தி நிற்பதாகட்டும்!

## நீதி வழங்கவில்லை

"டோஜோவுக்கும், அவரது சகாக்களுக்கும் மரண தண்டனை விதித்த ஸர்வதேச ராணுவக் கோர்ட்டார் ராஜீய ஆதிக்கத்தின் உபகரணமாக நடந்துகொண்டனரே ஒழிய, நீதி வழங்கவில்லை" என்ற அபிப்பிராயத்தை யு. எஸ். சுபரீம் கோர்ட் நீதிபதி டக்ளஸ் வெளியிட்டார்.

சர்வதேச ராணுவக் கோர்ட் தீர்ப்புகளின் மீது அப்பீலை விசாரிக்க சுப்ரீம் கோர்ட்டுக்கு அதிகாரமில்லையென்றாலும், இப்பொழுது பிரபலமாகிவரும் ஷெ விசாரணை முறையைப் பற்றிய தம் கருத்தை எடுத்துரைக்காமலிருக்க இயலாதென்று அவர் கூறினார்.

# படிப்பகம்

## மேடைத்தமிழ்

ஆசிரியர்: டி. எம். தெய்வசிகாமணி அவர்கள் எப். ஆர். எஸ். ஏ., (லண்டன்)

மேடைத் தமிழ்! தமிழுலகிலே இதுகாறும் நடமாடாத நூல். பல நாட்களுக்கு முன்பே வந்திருக்க வேண்டிய நூல்—பலராலும் எதிர் பார்க்கப்பட்ட நூல். தமிழறிஞர்களின் உள்ளங்களிலே கொழுந்துவிட்டு எரிந்துகொண்டிருந்த வேணவாவினைத் தணித்து, மகிழ்ச்சியினை மலரவைக்கும் பெற்றிவாய்ந்த இந்த அரியபெரிய நூலை, உருவாக்கித்தரும் சீரிய பணியினை மேற்கொண்டு கடமையை ஆற்றித்தந்த அன்பர் டி. எம். தெய்வசிகாமணி அவர்களைத் தமிழுலகம் பாராட்டாமலிருக்க இயலாது. இந்நூலுக்குச் சிறந்த தமிழறிஞரான திரு. வி. க. அவர்கள் தம் அழகிய—தெளிந்த—உயிரோட்டமுள்ள—செந்தமிழ் நடையால் அணிந்துரையொன்று வழங்கியுள்ளார்கள். மேடைமீது ஏறி நிற்கும் தமிழனும்—ஏறிநிற்க விரும்பும் தமிழனும் கைக்கொள்ள வேண்டிய முறைகளையும், கேட்கும் மக்களைத் தன்பால் பிணிக்கும் வழிகளையும், கேட்காத மக்களும் விரும்பிக்கேட்க வேண்டும் கேட்கவேண்டும் என்னும் ஆவலால் உந்தப்பட்டுத் தன் மேடையருகே வந்துமொய்க்கும்படியாகச்செய்யும் வகைகளையும் இந்நூலாசிரியர் தெள்ளத் தெளிய விளக்கியுள்ளார். சுருங்கக்கூறின் தமிழ் மேடைப்பேச்சின் இலக்கணம் முழுவதையும் வரையறுத்துக் கூறிவிட்டார் என்றே கூறவேண்டும். இன்பத்தேன்பிலிற்றும் செந்தமிழ்ச் சொற்கள், களிநடனம் புரிந்து,எழில் நடை போட்டு, இறுமாந்து செல்கின்றன. தமிழ்ச் சொல்லேருழவர் பலரின் தீந்தமிழ்ச் சொற்பொழிவுகளை மேற்கோள்களாக எடுத்துக்காட்டி, பேச்சுத்திறமைகளை ஆங்காங்குபுலப்படுத்திச் செல்கிறார். யாரும்,மேடை ஏறி, சொன்மாரி பொழிந்து, நாட்டவரின் நன்மதிப்பைப் பெற்று, வெற்றி கொண்டு, வீறுபெற்று எழுந்து, தோலாமொழி நாவலர்களாகத் தாமும் திகழவேண்டும் என்றதோர் உள்ள நெகிழ்ச்சியைக் கொள்வார்கள் என்பதில் ஐயமில்லை.

பெறும் இடம்: 29-A, திருவேங்கடமுதலித்தெரு, பார்க்டவுன் போஸ்ட், சென்னை. விலை ரூ. 10.

## வள்ளுவர் கொள்கையும் வடவர் கொள்கையும்

ஆசிரியர்: இறையனார்.

இது ஒரு அரிய ஆராய்ச்சி நூல். வடக்கிலிருந்து வந்தவர்களாகிய ஆரியர்களின் நூல்களில் கூறப்படும்அறிவுக்குப் பொருந்தாத கொள்கைகளுக்குத், தமிழ்ப் பெருமக்களின் பண்பட்ட மரபுவழிவந்த வள்ளுவருடையஅறிவியற்கொள்கைகள், முற்றும் மாறுனவை என்பதை வடநூல்களிலிருந்தும் சான்றுகள் எடுத்துக் காட்டித்தெளிவாக விளக்குகிறார் ஆசிரியர் இறையனார். வள்ளுவர் யார்? வடவர் யார்? என்பவற்றின் விளக்கங்களும் இதன்கண் தெளிந்த நடையில் விளக்கப்படுகின்றன.

பெறும் இடம்: தமிழகம், இலிங்காயத்தார் தெரு, உறையூர், திருச்சிராப்பள்ளி. விலை ரூ 1.

* * *

## சூருவளி

ஆசிரியர்: ஏ. கே. வேலன்.

இதுஒரு உரைநடை நாடகம். சமுதாயத்தில் காணப்படும் பல நிகழ்ச்சிகளைக் கோர்வைப்பட ஒன்கப்பிணைத்து, மனித வாழ்வின் ஒரு பகுதியை நாடக உறுப்புகளின் மூலம் நம் கண்முன் கொண்டுவந்து நிறுத்துகிறார்நண்பர் ஏ.கே.வேலன். சமுதாயத்தில் நடைபெறவேண்டிய சீர்திருத்தத்தை உறுப்புகளின் மூலம் பேசவைக்கிறார். அவைகளின் பேச்சுமூலம் நம்மைச் சிந்திக்கவைக்கிறார்.

பெறும் இடம்: செந்தமிழ்ப் பாசறை, கரந்தை, தஞ்சாவூர். விலை ரூ. 1.

* * *

## கனவில் கண்ட கவி

ஆசிரியர்: விவேகி.

இது ஒரு சிறுகவிதைக்காப்பியம். படுக்கையில் படுத்துறங்கும் கவிஞன் ஒருவன், கனவுலகில் நடமாடுகிறான். கனவுலகில் காணப்படும் ஒரு கவி பலபுரட்சிச் செயல்களைப்புரிகிறான். ஒன்றுபட்ட திராவிடத்தைக் காணுவதே அவன் இலட்சியமாக இருந்து வருகிறது. கனவில்வரும் கவிஇறுதியில் வெற்றி பெறுகிறான். விழாக் கொண்டாடப்படுகிறது. கனவு கண்ட கவியும் விழித்தெழுகிறான்.

பெறும் இடம்: திராவிட கலாநிலையம், 55, முக்தாருன்னிஸா பேகம்தெரு, மவுண்ட்ரோடு, சென்னை. விலை அணா 10.

## அனுதைகள்

ஆசிரியர் : என். இ. பாலகுரு

சமுதாயத்தைச் சித்தரித்துக் காட்டும் சிறுகதை. இக்கதையின் மூலம், சமுதாயத்தில் நடமாடும் பல அனுதைகளை நமக்கு அறிமுகப் படுத்தி, நம்மைச்சிந்திக்க வைக்கிறார் இதன் ஆசிரியர்.

பெறும் இடம்:-ஔவையார் பதிப்பகம், ஈரோடு. விலை அணா 8

* * *

## திருக்குறள் ஆராய்ச்சி

ஆசிரியர் : இறையனார்

இது திருக்குறளைப் பற்றியதொரு சிறந்த ஆராய்ச்சி நூல். திருக்குறளைப்பற்றிப் பல வகையான கருத்துக்களும், கொள்கை விளம்பரங்களும், குழப்பங்களும் மிகுந்துள்ளமையால், திருக்குறளைப் பற்றிய உண்மையை உணர்ந்துகொள்ள வேண்டுமென்ற உள்ளக்கிளர்ச்சியை உணர்ச்சியின் எழுச்சியைப் பொது மக்களிடம் உண்டாக்கும் நோக்குடனேயே இந்நூல் ஆசிரியரால் ஆராய்ந்து எழுதப்பட்டுள்ளது. திருக்குறளைப் பற்றிப் பொதுவாக அறிந்துகொள்ளப் பயன்படும் நூல்.

பெறும் இடம்:- தமிழகம், லிங்காயத்தார் தெரு, உறையூர், திருச்சிராப்பள்ளி. விலை ரூ 1—8—0

### ஐக்கிய திராவிடம்

ஆசிரியர் : விவேகி

சிதறுண்டு கிடக்கும் திராவிடப் பகுதிகளெல்லாம், ஒன்று திரண்டு, ஐக்கிய திராவிடமாக அமைந்து, வடநாட்டின் பிணைப்பிலிருந்து விடுபட்டுத் தனியாட்சி நடத்தும் தன்மையனவாக உருவாகவேண்டும் என்று இதன்கண் வலியுறுத்தப் படுகிறது. யாரும் எளிதில் புரிந்து கொள்ளும் வண்ணம் எழுதப்பெற்றிருக்கிறது.

பெறும் இடம்:- திராவிட கலா நிலையம், 55, முக்தாருனிசா பேகம் தெரு,மவுண்ட்ரோடு, சென்னை-2 விலை அணா 12.

* * *

### கொதிக்கும் இரத்தம்

ஆசிரியர் : அ. வெ. ரமணி

இது ஒரு கவிதைத் தொகுப்பு. ஆசிரியர் பல்வேறு தலைப்புக்களில் எழுதிய கவிதைகள் தொகுக்கப்பட்டு, 'கொதிக்கும் இரத்தம்' என்ற நூற்பெயரின் கீழ் அமைக்கப்படுகின்றன.

பெறும்இடம் :இயற்கைவெளியீடு, திருநாகேஸ்வரம், கும்பகோணம். விலை அணா 8

* * *

### நாம் யார் ?

ஆசிரியர் : "விவேகி"

நாம் யார்? என்ற கேள்வியினைக் கேட்டு, நாம் திராவிடர்கள், நம் நாடு திராவிடநாடு என்ற கருத்தினைப் பதிலாக விளக்கிக் காட்டுகிறார் ஆசிரியர்.

பெறும் இடம் : திராவிட கலா நிலையம், 55, முக்தாருனிசா பேகம் தெரு, மவுண்ட் ரோடு, சென்னை விலை அணா 8

* * *

### இராம இராச்சியம்

ஆசிரியர் : கைவல்யம்

பகுத்தறிவுப் போறிஞர் கைவல்யம் அவர்கள், தேசியத் தோழர்களும், வைதிகர்களும் பாராட்டிப் புகழ்ந்துவரும் இராம இராச்சியம் எப்படிப்பட்ட பிற்போக்குத் தன்மைகள் வாய்ந்தது என்பதை அழகுற அலசிக் காட்டுகிறார். வைதிக புரியினர்க்கு இந்நூல் ஒரு பேரிடியென விளங்கும் என்பதில் ஐயமில்லை. மற்றையோர்க்குத் தெளிவினைப்பயக்கும்ஆராய்ச்சி நூலாகும் இது.

பெறும் இடம் : அறிவுப் பண்ணை 6, மங்கம்மாள் தெரு, எழுகிணறு சென்னை—1 விலை அணா 10

* * *

### பொன் மொழிகள்

தொகுத்தது :

திராவிடமணிப் பதிப்பகம்

பெரியார் அவர்கள் அவ்வப்போது கூறிவரும் கருத்துக்கள் பொறுக்கியெடுக்கப்பட்ட சில 'பொன் மொழிகள்' என்றதலைப்பில் தொகுக்கப்பட்டுள்ளன. மேலட்டை பொன்னிறங் கொண்டு மிளிர்கின்றது.

பெறும் இடம் : திராவிடமணி பதிப்பகம், தெப்பகுளம், திருச்சிராப்பள்ளி. விலை அணா 14

* *

### மூலபலம் முறிகிறது

ஆசிரியர் : சி. என். ஏ. (புதிய நூல்)

பெறும் இடம் : அறிவுப் பண்ணை, 6, மங்கம்மாள் தெரு, எழுகிணறு, சென்னை—1 விலை அணா 8

* * *

### மாணவர் திருக்குறள் மணிகள்

பெறும் இடம் : தமிழ் இல்லம், கோம்பை, மதுரை மாவட்டம்.

* * *

### அழகர்சாமியின் படம்

பெறும் முகவரி : ஏ. எஸ். வேணு, டெய்லர், 32, தாத்தாமுத்தியப்பன் தெரு, சென்னை—1.

* * *

### அமுதவல்லி

ஆசிரியர் : என். இ. பாலகுரு

இது ஒரு சிறுகதை. சமுக சோக சித்திரத்தின் படப்பிடிப்பு.

பெறும் இடம் : அர்ச்சுனன் நிலையம், ஈரோடு. விலை அணா 2

—✲—

அவன் குற்றவாளியா?

4-ம் பக்கத் தொடர்ச்சி

முறை உலகம் கூறும். உலகம் அறியாது, அரசாங்கமும் ஆற்றல் படைத்தோர் வழிதான் நடக்கும், நடக்கும் வழி அநீதியாக இருந்தாலும் என்பதை. அவன் உள்ளபடியே குற்றவாளியா? நல்ல தீர்ப்புக் கூற நீதி இன்னமும் நடுங்கிக் கொண்டுதானிருக்கிறது.

இதைப்போல எத்தனையோ எடுத்துக்காட்டுகளைக் காட்டலாம். நம் சமுதாய வாழ்வு சேறும், மலமும் செறிந்த சீரழிந்த இடம்; அழிக்க வேண்டிய அழுகல் பொருள்கள் ஆழ்ந்து கிடக்கும் அகழ்; புழுவும், பூச்சியும் புரளும் பாழ் நிலம். அதிலிருந்து கொலை, களவு, கொள்ளை, பொய், போன்ற குற்றக் கிருமிகள் உற்பத்தியாகிக்கொண்டுதான் இருக்கின்றன. பொய் பேசாதே, மெய் பேசு என்பன போன்ற விதிவிலக்குச் சட்டங்களால் அவற்றை ஒழிக்க முடியாது. சேற்றையும் மலத்தையும் அழித்து, புதிய சமுதாயத்திற்கான வழியைக் காண அறிஞர்கள் முயலவேண்டும். முயல்வார்களா அவர்கள்? இது உருவாகிக்கொண்டிருக்கும் புதிய உலகம் கேட்கும் கேள்வி!

✲

### சந்தாதாரர்களுக்கு

"திராவிட நாடு" சந்தாதாரர்கள், சந்தா சம்பந்தமாகக் கடிதம் எழுதும்போது சந்தா எண்ணைக் குறித்தெழுத வேண்டும். சந்தா எண் குறிப்பிடாத கடிதங்கள் கவனிக்கப்படமாட்டா. சந்தா முடியும் தேதி ஒவ்வொரு முகவரிக்கு அடியிலும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதைப் பார்த்துச் சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளவும்.

மானேஜர்.

Edited Printed & Published by C. N. Annadurai M. A. at "Dravidanadu" Press, 95, Tirukkachinambi Street. Kancheepuram,